www.padippakam.com

மே 2001 ரூ.7


# புதிய கல்வி

சுற்றுச்சூழல் மாத இதழ்



காலநிலை மாற்றம்:

## சூடாகும் பூவுலகு



"இயற்கையை அழிக்கும்போது மனிதத் தன்மையும் அழியும்"

கோவை **ஞானி** நேர்காணல்

படிப்பகம்

www.padippakam.com

# கவர்ச்சித் திரைப்படங்கள் பற்றி இல்லை!

## காட்டுத்தனமான அடிதடிகள் பற்றி இல்லை!




வினா - விடை வடிவில் சுற்றுச் சூழல் சட்டங்கள்.

உலக நாடுகளில் இறால் பண்ணைகளின் பெருக்கத்தால் ஏற்பட்ட சிக்கல்கள்.

# ஆனால்... அறிவைப்பற்றி ஏராளம் உண்டு!



தமிழகத்தின் நெருக்கடியான சுற்றுச்சூழல் சிக்கல்கள்.



பவானி ஆற்றில் ஏற்பட்டுள்ள மாசுபாடுகள் பற்றிய ஆய்வறிக்கை.




நிலைத்த வேளாண்மை, விதைகள் பற்றி விளக்கமான கட்டுரைகள்.

உலகளாவிய
சூழலியல் சிக்கல்களையும்
போக்குகளையும்
அறிய வேண்டாமா?

உலக வங்கியும்
பிற நிதி நிறுவனங்களும்,
மூன்றாம் உலக நாடுகளை
நெருக்குவதை
அறிய வேண்டாமா?

புதிய பொருளாதாரக் கொள்கையும்
உலக வணிக நிறுவனமும்,
பன்னாட்டு வணிகக் கழகங்களும்,
வந்துள்ள நிலைமையை
உற்று நோக்க வேண்டாமா?

நம்மைச் சுற்றி நடைபெறும்
சூழல் நெருக்கடிகளை
புரிந்துகொள்ள வேண்டாமா?

## இந்தப் புத்தகங்கள் உங்களுக்கு உதவிடும்.

**நீதிபதி பகவதி சுற்றுச்சூழல் வளர்ச்சி நிறுவனம்,**
காவலர் குடியிருப்பு அருகில், திருச்சி சாலை,
திண்டுக்கல் - 624 005
தொலைபேசி: 0451 - 432 021 தொலைநகல்: 0451 - 432 372
மின்னஞ்சல்: peace@md3.vsnl.net.in

www.padippakam.com


புதிய கல்வி
சூழல் மாத இதழ்

காக்கை குருவி எங்கள் சாதி – நீள்
கடலும் மலையும் எங்கள் கூட்டம்

மலர்: 11 இதழ்: 7
மே – 2001

நிறுவிய ஆசிரியர்
**ஜே.பால் பாஸ்கர்**

ஆசிரியர்
**மெர்சி பாஸ்கர்**

இணை ஆசிரியர்
**அசுரன்**

அலுவலக நிர்வாகம்
**காளீஸ்வரி**

**சந்தா**

| | உள்நாடு | வெளிநாடு (வான் அஞ்சல்) |
|---|---|---|
| தனி இதழ் | ரூ. 7 | ------ |
| ஆண்டு சந்தா | ரூ.75 | US$ 10 |
| ஆயுள் சந்தா | ரூ.750 | US$ 100 |



சென்னை தொடர்புகளுக்கு:
*24–பி, சரோஜினி அபார்ட்மென்ட்ஸ்,*
*23, சரோஜினி தெரு, தியாகராயர் நகர்,*
*சென்னை–600 017*
*தொலைபேசி: 044–4348922*
*தொலைநகல்: 044– 4335292*

அனைத்து தொடர்புகளுக்கும்

**நியூ–எட் பப்ளிகேசன்ஸ்**
ஹெச் 2–30,
இராணிமங்கம்மாள் காலனி,
அங்குநகர் (அஞ்சல்),
திண்டுக்கல் – 624 001

தொலைபேசி: 0451–461512

மின்னஞ்சல்:
**puthiyakalvi@hotmail.com**


*ஆசிரியர் பக்கம்*

# தூங்கிவழியும் டெல்லி அரசு

டெல்லி காற்று மாசுபாடு குறித்து உச்சநீதிமன்றத்தில் தொடரப்பட்ட ஒரு பொதுநல வழக்கைத் தொடர்ந்து, நுரையீரல் நோய்கள் புற்றுநோய் போன்றவற்றால் டெல்லி மக்கள் பெருமளவில் பாதிக்கப்பட டீசல் வாகனப்புகை மாசுபாடே காரணம் என்பதால் அதற்குத் தீர்வுகாண பூரேலால் குழு அமைக்கப்பட்டது. அது, 15 ஆண்டுகளுக்கு மேற்பட்ட வர்த்தக ரீதியிலான வாகனங்களை இயங்க அனுமதிக்கக்கூடாது, சரக்கு வாகனங்கள் பகலில் நகருக்குள் வரக்கூடாது, குறித்த காலத்திற்குப் பிறகு அழுத்தப்பட்ட இயற்கை வாயு (சி.என்.ஜி.)யால் ஓடும் பேருந்துகளைத் தவிர பிறவற்றை அனுமதிக்கக்கூடாது என பரிந்துரை செய்தது.

1998 சூலை 28 ஆம் நாள் இந்தப் பரிந்துரைகளை ஏற்பதாகவும் பேருந்துகளை அ.இ.வாயுவிற்கு மாற்றுமாறும் 2001 மார்ச் 31ஆம் நாளுக்குப்பிறகு டீசல் பேருந்துகள் டெல்லியில் இயங்க முடியாது என்றும் உச்சநீதிமன்றம் அறிவித்தது.

இரண்டரை ஆண்டுகாலமாக தூங்கிவழிந்த டெல்லி நிர்வாகம் இறுதிநேரத்தில் கைவிரித்தது. ஆனால் அசராத உச்சநீதிமன்றம் மார்ச் 26 ஆம் நாளன்று, அதுவரையிலும் அழுத்தப்பட்ட இயற்கை வாயுவுக்கு மாற நடவடிக்கை எடுத்திருந்த அல்லது புதிய வாகனங்களுக்கு பதிவு செய்திருந்த வாகனங்களை மட்டும் வரும் செப்டம்பர் 30 ஆம் நாள் வரை ஓட அனுமதித்தது. பிற வாகனங்கள் இயங்க அனுமதி மறுத்தது.

காலஅவகாசம் முடிவதற்கும் ஒருவாரம் முன்புவரை உரிய நடவடிக்கைகளை எடுக்காத டெல்லி அரசால் அரசு பேருந்துகள் ஓடமுடியாமற்போயிற்று. கொதித்த பொதுமக்களால் சில பேருந்துகள் தீயிட்டு எரிக்கப்பட்டன. அரசும், போக்குவரத்துத் துறையும் உரிய நடவடிக்கை எடுத்திருந்தால் இச்சிக்கல் ஏற்பட்டிருக்குமா?

சந்தடிச் சாக்கில், அழுத்தப்பட்ட எரிவாயு வாகனங்களை விட, 'தரமான டீசல்' வாகனங்களால் மாசுபாடு மேலும் குறையும் என்ற ஒரு அறிக்கையை டெல்லி மாநில துணைநிலை ஆளுநர் விஜய் கபூரை வைத்து வெளியிட்டு குட்டையை குழப்பியுள்ளது டாடா ஆற்றல் ஆய்வு நிறுவனம் (TEERI). இதனை அறிவியல் மற்றும் சுற்றுச்சூழல் மையம் (CSE) வன்மையாக மறுத்துள்ளது.

தற்போது நீட்டிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ள காலஅவகாசத்திலாவது டெல்லி அரசும் பிறரும் தம் வாகனங்களை மாற்றிக்கொள்ளவேண்டும். இல்லையேல் அக்டோபர் 1, 2001லும் டெல்லி சாலைகளில் வாகனங்கள் நொறுக்கப்படுவதையும் எரிக்கப்படுவதையும் தடுக்க முடியாது.

அன்புடன்,
ஆசிரியர்

புதிய கல்வியின் தொலைபேசி எண் மாறியுள்ளது
புதிய எண்: **0451- 461512**

படிப்பகம்

www.padippakam.com

பார்வை-1

# "நாம் ஆதிவாசிகளுக்கு எதிரிகளாகிவிட்டோம்!"

"எந்த திட்டமும் மக்கள் பங்கேற்பு இல்லாவிட்டால் வெற்றியடையாது. மக்களிடமிருந்து வனத்துறை விலகி இருக்கிறது. காட்டுக்குள் வசிக்கும் ஆதிவாசி மக்களுக்கே வனத்துறையினர் எதிரிகளாகி விட்டீர்கள்.

சிறு வனப்படு பொருள்களான புளி, கடுக்காய், நெல்லி போன்றவற்றை ஆதிவாசி விற்றுப் பிழைத்து வந்தான். அதில் என்ன லட்சம் லட்சமாகச் சம்பாதித்துவிடவா முடியும்?



காட்டைக் காடாக வைத்திருக்க உதவி செய்பவன் ஆதிவாசி. நாம் அவனுக்கு எதிரியாகிவிட்டோம். சந்தனக் கடத்தல்காரர்கள் அவர்களை நண்பர்களாக்கிக் கொண்டுவிட்டனர்.

வனத்தில் விளையும் பொருள்களை விற்றுக்கொள்ளும் உரிமையை ஆதிவாசிகளுக்கே மீண்டும் அளிக்க விரைவில் உத்தரவு போடப்படும்.

சட்டங்கள் இருந்தாலும் அவை கடுமையாக இருப்பின் நிலைத்து நிற்பதில்லை. அச்சட்டங்களுடன் மக்களிடம் செல்லும்போது நீக்குப்போக்குடன் நடந்துகொள்ளவேண்டும் மிகக்கடுமையாக நடந்துகொள்ளக்கூடாது.

காட்டில் கோயில் இருக்கிறது பல தலைமுறைகளாக அங்குபோய் கும்பிட்டு வருபவர்களை இப்போது தடுத்து நிறுத்தினால் எப்படி? விலங்குகளை வேட்டையாடுவோரை, சந்தனக் கடத்தல்காரர்களை நீங்கள் வேட்டையாடுங்கள் நான் குறைகூறமாட்டேன்.

இந்நிகழ்ச்சிக்கு என்னை அழைத்தபோது இது துறை அதிகாரிகள் மட்டும் கலந்துகொள்ளும் நிகழ்ச்சி என்று நினைத்தேன். சில விசயங்களை உங்களுடன் மனம்விட்டு வெளிப்படையாகப் பேசலாம் என்று வந்தேன். ஆனால், இங்கே பத்திரிகையாளர்கள் அழைக்கப்பட்டுள்ளனர். அவர்களை வைத்துக்கொண்டு மனம்விட்டுப்பேச முடியாது.

நானும் பல துறைகளுக்கு அமைச்சராக இருந்திருக்கிறேன். வனத்துறைபோல புகார்கள் வரும் துறை வேறு ஏதும் இல்லை. பாதி உங்களைப் பற்றி மக்கள் சொல்லும் புகார்கள். மீதிப்பாதி உங்களைப் பற்றி உங்களைச் சார்ந்தவர்களே எழுதும் புகார்கள்".

*18 ஜூலை 2000 அன்று கோவை வனக் கல்லூரியில் நடைபெற்ற தமிழ்நாடு வனவளர்ப்புத் திட்டக் கருத்தரங்கில் வனத்துறை அமைச்சர் துரைமுருகன்*

சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்காக,
சுற்றுச்சூழல் செயல்பாடுகளுக்காக
தமிழின் முதல் இணையதளம்

**http://www.pasumaiulagam.com**

தொடர்புகளுக்கு: *puthiyakalvi@hotmail.com*




படிப்பகம்

www.padippakam.com

## கோவை:

# ஆதிவாசிகளின் வாழ்வுரிமைப் போராட்டம்





மக்களின் பங்கேற்பின்றி செயல்படுத்தப்படும் எந்தத் திட்டமும் வெற்றிபெறாது. குறிப்பாக, கானக மேம்பாட்டுத் திட்டங்களை அப்பகுதி மக்களின் பங்கேற்புடனே செயல்படுத்த முடியும் என்றவகையில் ஒருங்கிணைந்த கானக மேம்பாட்டுத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ஆனால் நீரிலிருந்து மீனைப் பிரித்தெடுததுவிட்டு நீரைப் பாதுகாப்பது போல காடுவாழ் பழங்குடி மக்களை அவர்களின் பாரம்பரிய வாழிடங்களிலிருந்து பிரித்தெடுத்துவிட்டு கானுயிர் தொடர்பான திட்டமொன்றை நிறைவேற்ற அரசு ஆதரவுடன் சிலர் முனைந்து வருகின்றனர். கோவைக்கு அருகில்தான் இந்த முட்டாள்தனமான நிகழ்வு நடந்துவருகிறது.

இன்று தமிழகத்தின் முக்கிய தொழில் நகரமாக உள்ளது கோவை. அருகில் மேற்குத்தொடர்ச்சி மலை, அமைதிப்பள்ளத்தாக்கு, சிறுவாணி நீர் என பலவும் இதற்கு மேலதிக புகழ் சேர்க்கின்றன. அருகிலுள்ள திருப்பூரும் விமான நிலையமும் இன்னும் வசதிகள். கோவையிலிருந்து 30 கி.மீ. தொலைவில் மேற்குத்தொடர்ச்சி மலையில் உள்ளது தூவைபதி என்ற பழங்குடி மக்கள் கிராமம். இங்கு வாழும் இருளர் இன மக்கள் கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக தமது வாழ்வுரிமைக்காகப் போராடிவருகின்றனர். அப்படி என்னதான் நடக்கிறது அங்கே?

கோவையைச் சேர்ந்த ஜி.ரங்கசாமி என்ற தொழிலதிபரின் தலைமையில் 1986—ல் தொடங்கப்பட்டது 'கோவை உயிரியல் பூங்கா' என்ற அமைப்பு. இது கோவை உயிரியல் பூங்கா என்ற பெயரில் ஒரு திறந்தவெளி விலங்கு காட்சியகத்தை நிறுவ திட்டமிட்டது. இது நீலகிரி உயிர்ச்சூழலின் *(Biosphere)* தனித்த பகுப்பாய்வு *(interpretation)* மையமாகவும் புதுவித விலங்கு அருங்காட்சியகமாகவும், சுற்றுலா மையமாகவும் இருக்கும் என்று கூறப்பட்டது.

'விலங்கு காட்சியக விரிவாக்கும் இயக்கம்' *(ZOO- Zoo Outreach Organisation)* என்பது இதனோடு தொடர்புடைய

படிப்பகம்

www.padippakam.com

நிறுவனமாகும். இது பறவையியலாளர்கள், கால்நடை விஞ்ஞானிகள், சூழலியலாளர்கள், தொழிலதிபர்கள் என பலரும் அடங்கிய அமைப்பு என்று கூறப்படுகிறது. உயிரியல் பூங்காவை எங்கே, எப்படி அமைப்பது என இதுதான் திட்டமிட்டுக் கொடுத்தது என கூறப்படுகிறது. இதன் செயலராக இருப்பவர் சாலிவாக்கர் என்ற அமெரிக்க பெண்மணி.

இந்த உயிரியல் பூங்காவை அமைக்க 400 ஏக்கர் நிலம் தேவையென்று இந்நிர்வாகம் அரசிடம் கேட்டது. பழங்குடி மக்கள் பாரம்பரியமாக பயன்படுத்தி வந்த பகுதிகளை, பட்டா இல்லை என்று காரணம் கூறி, அதனை அரசு புறம்போக்கு என்று எடுத்து 300 ஏக்கரை நீண்டகால குத்தகைக்குத் தர முடிவுசெய்யப்பட்டது. மேலும் 100 ஏக்கர் நிலத்தை பழங்குடி மக்களிடமிருந்து வாங்க முடிவு செய்யப்பட்டது.

இதன் முதல்கட்டமாக பழங்குடி மக்கள் பரம்பரையாக பயன்படுத்தி வந்த நிலங்களுக்கு, அந்நிலத்தை அனுபவிப்பதற்கான ஆவணமான 'பி மெமோ' வைக் கொடுப்பதை 1987முதல் அரசு நிறுத்தியது. இதன் மூலம் அந்நிலங்கள் அரசு புறம்போக்கு நிலங்களாயின. தவிர, பட்டா பெற்று பழங்குடி மக்கள் அனுபவித்துவந்த நிலத்திலும் வருவாய் அதிகாரிகள் மூலம் அவர்களின் நிலத்தை அரசு

### நூற்றாண்டுகளாகத் தொடரும் அவலம்

தமிழகத்தின் தொழில்நகரமான கோயமுத்தூரின் பழைய பெயர் கோவன்பதி என்றும் இருளர் இனத்தலைவரான கோவன் என்பவரின் நினைவாக அமைந்தது இது என்றும் கூறப்படுகிறது. அப்போது இது அடர்ந்த காடாக இருந்தது.

16-ம் நூற்றாண்டின் இறுதி அல்லது 17-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் விஜயநகர பேரரசர்களாலும் மைசூரின் ஒய்சாளர்களாலும் ஆதிவாசி மக்கள் கோவை நகரிலிருந்து 15 கி.மீ. தொலைவிலுள்ள துடியலூருக்கு விரட்டியடிக்கப்பட்டனர். அதன் பின்னர் 18 ஆம் நூற்றாண்டில் படையெடுத்து வந்த திப்புசுல்தான் அங்கிருந்து அடர்ந்த காடுகளுக்குள் விரட்டியடித்தான் என்று கூறப்படுகிறது.

ஆங்கிலேயர் காலத்தில் நகர வளர்ச்சிக்காக இம்மக்கள் வாழ்ந்துவந்த கானக வளங்கள் அழிக்கப்பட்டன. 1960 களில் கோவை மாவட்டம் மற்றும் கேரளாவிலிருந்து வந்த சமவெளிப்பகுதி மக்கள் பெருமளவில் குடியேறி முறைகேடாக நிலங்களை கைப்பற்றியதால் 80 விழுக்காடாக இருந்த பழங்குடி மக்களின் எண்ணிக்கை 1990 களில் 40 விழுக்காடானது. இந்நிலையில்தான் நகர்ப்புறவாசிகளின் மகிழ்ச்சிக்காக பழங்குடியினரை வெளியேற்றிவிட்டு உயிரியல் பூங்கா அமைக்க முயற்சி நடைபெற்று வருகிறது.

எடுத்துவிட்டதாகவும் உடனடியாக கோவை உயிரியல் பூங்கா நிர்வாகத்திற்கு விற்றால் பணமாவது மிஞ்சும் என கூறவைத்தும், மிரட்டியும், அடியாட்களை வைத்து அடித்தும், சாராயம் கொடுத்து ஏமாற்றியும் 100 ஏக்கர் வாங்கிவிட்டதாகவும் மக்கள் குடியுரிமைக் கழக (பியுசிஎல்) உண்மையறியும் குழுவின் அறிக்கை கூறுகிறது.

இவ்வாறு பழங்குடி- மக்களின் தாய்மண் அவர்களிடமிருந்து பறிக்கப்படுவதும், கானகத்தின் சொத்தாக உள்ள பழங்குடியினர் நாடோடிகளாகும் அவலமும் நிகழ்கிறது. பழங்குடி மக்களின் போராட்டம், மனித உரிமை ஆர்வலர்களின் எதிர்ப்பின் காரணமாகவும் 1990 மே மாதம் 'மக்கள் எதிர்ப்பு உள்ளவரை உயிரியல் பூங்கா திட்டம் நிறைவேற்றப்படாது' என கோவை மாவட்ட ஆட்சியர் உறுதி கூறினார். எனினும் மக்களை அப்பகுதியிலிருந்து அப்புறப்படுத்தும் முயற்சிகள் தொடர்ந்து நடந்துவந்தன.

கோவை உயிரியல் பூங்கா அமைக்க தேர்வு செய்யப்பட்டுள்ள இடம் கானுயிர்கள், யானைகளின் வலசைப் பாதையாகும். அப்பகுதியில் தடை ஏற்படுத்துவது, வேலி அமைப்பது கானுயிர்களின் இயல்பான வாழ்வை தடுக்கிறது. உயிரியல் பூங்கா என்ற பெயரில் செய்யப்படுவதாலேயே இது

படிப்பகம்

www.padippakam.com

நியாயமாகிவிடாது.

மேலும், பல்வேறு இயற்கைச் சூழலில் வாழும் விலங்குகளை ஒரே இடத்தில் வைத்திருப்பதும் இயற்கைக்கு மாறானதே. 1994 சனவரி 2—ம் நாள் வெளியான ‘இந்தியன் எக்ஸ்பிரஸ்’ நாளிதழில், ‘இந்த உயிரியல் பூங்கா திட்டத்தின் பின்னணியில் அரிய கானுயிர்களின் இரத்தம், விந்து கடத்தும் சதியும் உள்ளதாக’ ஐயம் எழுப்பப்பட்டுள்ளது.

1994—ல் மக்கள் குடியுரிமைக் கழக உண்மை அறியும் குழு சென்றபோது உயிரியல் பூங்கா நிர்வாகத்தால் தூவைபதி காட்டுப்பகுதியில் ஒரு மலைப்பாம்பு கண்ணாடி கூண்டில் அடைக்கப் பட்டிருந்ததை நேரில் கண்டுள்ளனர்.

சர்வதேச மனித உரிமை அமைப்பான ஃபியான் (FIAN) மற்றும் மனித உரிமை, சுற்றுச்சூழல், பழங்குடி மக்கள் அமைப்புகள் இணைந்து இத்திட்டத்தை எதிர்த்து வருகின்றன.

ஆனைகட்டி மலைவாழ் பழங்குடி ஆதிவாசிகள் சங்கம், ஆதிவாசி மக்கள் உரிமை பாதுகாப்புக் குழு, ஆனைக்கட்டி ஆதிவாசி இளைஞர் மன்றம் ஆகிய ஆதிவாசி அமைப்புகள் சேர்ந்து 1994 ஜூன் 5 ஆம் நாள் நடத்திய பொதுக்கூட்டத்தில்

—வீடுகளை இடித்து, பொருட்களை சூறையாடிய குண்டர்களை ஏவியதற்காகவும்

"நாங்கள் காடுகளிலேயே பிறந்தவர்கள். காடுகளோடும், அந்நிலத்தோடும் விலங்குகளோடும் இயைந்து, சுதந்திரமாக வாழ்ந்து வருபவர்கள். எங்கள் வாழ்க்கை இவற்றின் அடிப்படையிலேயே உள்ளது. மின்சாரம், அரசின் மேம்பாட்டுத் திட்டங்கள், வேலைவாய்ப்பு போன்ற நவீனங்களில் இல்லை. நாங்கள் பிறந்தது போலவே எங்கள் ‘நாடு’களில் சுதந்திரமாக வாழ விரும்புகிறோம்.

ஆனால் அரசோ வேட்டைக்காரர்கள் விலங்குகளை வேட்டையாடுவதைப்போல எங்களை வேட்டையாடுகிறது. எங்களை வெளியேற்றிவிட்டு எங்கள் ‘நாடு’களை வெளியாட்களிடம் கொடுக்கிறார்கள். எங்கள் நாடு, அதன் இயற்கை பற்றி உங்களுக்குத் தெரியுமா? இது எங்களின் தாய்மண். இதை சட்டபூர்வமாக நிரூபிக்கவேண்டிய அவசியம் இல்லை. யாரேனும் ஒருவரிடம் காட்டினுள் போய் வாழச்சொல்லுங்கள். அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்று பார்க்கலாம். அவர்களால் முடியாது, ஏனென்றால் அவர்கள் காட்டைப் பற்றி அறிவற்றவர்கள். எங்கள் ‘நாட்டைப்’ பற்றி அவர்களுக்கு ஏதும் தெரியாது".

–போத்தன், தூவைபதி

"இந்த அரசு எங்களை தாய்மண்ணிலேயே அகதிகளாக்குகிறது".

–நஞ்சி

(போத்தனின் மனைவி)

(1994–ல் ஃபியான் குழுவினரிடம் பேசியபோது)



www.padippakam.com

—சில பழங்குடியினரை வலுக்கட்டாயமாக அழைத்து சென்று பீளமேடு பயோனியர் ஹவுசில் சட்டவிரோதமாக அடைத்து வைத்ததற்காகவும்

—கிராமப் பொது சமூகக்கூடத்தை நாசமாக்கி 8 வயது பெண் குழந்தையை தாக்கியதற்காகவும்

பிற காரணங்களுக்காகவும் உயிரியல் பூங்கா செயலாளரான ரங்கசாமியையும், பிறரையும் கைதுசெய்யவேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இது நமக்கு பல உண்மைகளைச் சொல்வதாக உள்ளது.

இந்நிலையில் 1998 ஏப்ரலில் தூவைபதி கிராமத்தில் 181 ஏக்கர் நிலத்தை உயிரியல் பூங்காவுக்கு 20 ஆண்டு குத்தகைக்கு தாரைவார்த்து அரசாணை வெளியிடப்பட்டது. அமைதியாக இருந்த உயிரியல் பூங்கா நிர்வாகம் கடந்த மார்ச் மாதம் திடீரென்று பழங்குடிமக்கள் பகுதியில் கமபிவேலிகள் அமைத்தது. இதனைத் தடுத்த மக்களை காவல்துறை, வருவாய்த்துறை அதிகாரிகளை வைத்து மிரட்டியது.

பழங்குடிமக்களின் உரிமைக்காகக் குரல்கொடுத்த ராமசாமி என்பவரின் வீடு மார்ச் 25ஆம் நாள் எரிக்கப்பட்டது. பூங்கா நிர்வாக அடியாட்களால் பழங்குடி மக்கள் தாக்கப்பட்டனர். காயமடைந்த 21 பழங்குடியினர் மார்ச் 31 அன்று கைது செய்யப்பட்டு கோவை சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

**உயிரியல் பூங்காவுக்காக கைப்பற்றப்பட்ட நிலத்தைச் சுற்றிலும் கம்பிவேலி அமைத்து அதில் மின்சாரம் பாய்ச்சியுள்ளனர். இதில் சிக்கி இதுவரை பத்துக்கும் மேற்பட்ட மான்கள் கொல்லப்பட்டு உள்ளன. இதில் யானைகளும் சிக்கலாம்.**

தூவைபதி கிராமத்திற்கு அருகிலுள்ள ஆனைகட்டி மற்றும் சுற்றுப்புற ஊர்களில் உள்ள சிறு வியாபாரிகள், பழங்குடியினர் அல்லாத மக்களிடம் உயிரியல் பூங்கா திட்டம் வந்தால் அவர்களின் வருவாய் அதிகரிக்கும், வியாபாரம் பெருகும் என்று கூறி அம்மக்களை பழங்குடி மக்களுக்கு எதிராகத் திருப்பிவிட்டு தாக்குதல்கள் நடத்தவும் தூண்டிவிடுகிறது பூங்கா நிர்வாகம்.



உயிரியல் பூங்காவுக்காக கைப்பற்றப்பட்ட நிலத்தைச் சுற்றிலும் கம்பிவேலி அமைத்து பழங்குடியினர் அதனை நெருங்காமல் இருக்கும்பொருட்டு அதில் மின்சாரம் பாய்ச்சி வருகிறது பூங்கா நிர்வாகம். இந்த மின்சாரவேலியில் சிக்கி இதுவரை 10—க்கும் மேற்பட்ட மான்கள் கொல்லப்பட்டுள்ளன. (உயிரியல் பூங்கா கானுயிர்களை சாகடிக்கவா?). இதில் யானைகளும் சிக்கலாம். ஆனால் பூங்கா நிர்வாகத்திற்கு எதிராக இதுவரை வனத்துறை இதற்காக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை.

காடுகளே தாய்வீடான பழங்குடிமக்களை அவர்களின் பாரம்பரிய வாழிடத்திலிருந்து துன்புறுத்தி விரட்டியடிப்பது மனிதநேயமற்ற செயலாகும். இது மனித உரிமை மீறல் மட்டுமல்லாது தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி மக்கள் வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகும்.

குற்றவாளிகளுக்கும் சட்டவிரோத செயல்களுக்கும் ஆட்சியதிகாரம், செல்வாக்கும் துணைபோகும் சூழலிலும் தமது தாய்மண் உரிமைக்கான பழங்குடிமக்களின் போராட்டம் தொடர்கிறது.

-வழக்குரைஞர்
ச.பாலமுருகன்

www.padippakam.com

## சென்னையை வாட்டும் தண்ணீர் பிரச்சினை:

# தீர்வு என்ன?

இன்று உலகளவில் பெரும் சிக்கலாக உருவெடுத்துள்ள தண்ணீர் பிரச்சினை சென்னை நகரையும் விட்டுவைக்கவில்லை. மாநகராட்சி பகுதியில் வசிக்கின்ற மக்கள் நலவாழ்வுடன் வாழவேண்டுமானால் நாளொன்றுக்கு அவர்களுக்கு 150 லிட்டர் நீர் தேவை என்று உலக சுகாதார நிறுவனம் வரையறுத்துள்ளது.

ஆனால், நம் சென்னை மாநகர மக்களுக்குக் கிடைப்பதோ சுமார் 70 லிட்டர் நீர்தான். முக்கிய நீராதாரமான வடகிழக்குப் பருவமழை பொய்த்தால் 50 லிட்டர்தான் கிடைக்கும். 60 லட்சம் பேருக்கு மேல் மக்கள் வசிக்கின்ற சென்னை மாநகராட்சிப் பகுதியில் நாள்தோறும் 25 கோடி லிட்டர் நீர் விநியோகிக்கப் படுகிறது. உலக சுகாதார நிறுவன அளவுப்படி, விநியோகிக்க வேண்டுமானால் அது 95 கோடி லிட்டராக இருக்க வேண்டும். அருகிலுள்ள நகராட்சிப் பகுதிகளையும் சேர்த்தாலோ 120 கோடி லிட்டர் நீர் தேவை.

கடந்த 30 ஆண்டுகாலமாக சென்னையின் தண்ணீர் பிரச்சினையானது தொலைநோக்குக் கண்ணோட்டத்துடன், அறிவியல் பூர்வமாக அணுகப் படாமல் ஆளும்கட்சி, எதிர்கட்சி என அரசியல் ரீதியாக பார்க்கப்பட்டதே இச்சிக்கல் பெருக காரணம்.

“சென்னையின் தண்ணீர் பிரச்சினையானது அறிவற்ற, பொறுப்பற்ற அரசியலாக ஆகியுள்ளது. அதிகாரிகளும் அரசியல்வாதிகளும் ஒரேகுரலில் கிருஷ்ணாநதி நீர்தான் இதற்கு ஒரேதீர்வு என்று கூறிவருவது பெருங்கொடுமை” என்கிறார் மத்திய நகர்ப்புற மேம்பாட்டு அமைச்சக முன்னாள் செயலரும், சிலகாலம் சென்னை மாநகர குடிநீர் வாரிய நிர்வாக இயக்குநராக இருந்தவருமான லூயிஸ் மெனிசிஸ்.



லூயிஸ் மெனிசிஸ்

1976—ல் தான் முதன்முதலாக சென்னை மாநகரின் தண்ணீர் பிரச்சினை பற்றி பெரும் ஆய்வு (மாஸ்டர் பிளான்) நடத்தப்பட்டது. இதில் நீர்விநியோகமுறையின் செயல்பாடு தீவிரமாக ஆராயப்பட்டது. இந்த ஆய்வறிக்கையானது 19 ஆண்டுகள் கழித்து 1997—ல் தான் நடைமுறைக்கு வந்தது. தற்போது அறிவியல்பூர்வமான வழியில் நீராதாரங்களை புதுப்பித்தல், வளப்படுத்தல், நீர் விநியோகம், வடிகால் வசதிகள் செய்தல் போன்றவை மேற்கொள்ளப் படுகின்றன. ஆனால் கடந்த 30 ஆண்டுகால புறக்கணிப்பின் விளைவாக புதுப்புது சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. திட்டமிடப்படாமல் நகரம் விரிவடைந்தவருவதால் புதிய பகுதிகளில் கடும் தண்ணீர் தட்டுப்பாடு நிலவுகிறது.

“நீண்டகாலமாக முழுமையான பார்வையுடன் திட்டமிடுதல் செய்யப்பட வில்லை. கடந்த 4 ஆண்டுகளாக நிறைய திட்டங்கள் செயல்படுத்தப் படுகின்றன. இதன் பலன் கிடைக்க சிறிது நாட்களாகும்” என்கிறார் மாநகர குடிநீர்வாரிய நிர்வாக இயக்குநர் சி.பி.சிங்.

மாநகரக் குடிநீர் வாரியமானது ஏற்கனவே குடிநீர் வழங்கியவர்கள்போக புதியவர்களுக்கும் குடிநீர் வழங்கவேண்டி இருக்கிறது. நீண்டகாலமாக தமது சொந்த கிணறுகள், ஆழ்குழாய் கிணறுகளை பயன்படுத்தி வந்தவர்களே அவர்கள். நிலத்தடிநீர் கீழே போய்விட்டது, நிலத்தடிக்கு நீர்தரும் பகுதிகள் அழிந்துபோனது

படிப்பகம்

www.padippakam.com

போன்றவற்றால் பாதிக்கப்பட்டவர்கள் இவர்கள். கடந்த பிப்ரவரி மாதம் சராசரி நீர்மட்டம் 22.48 மீட்டராக இருந்தது. இது கடந்த ஆண்டைவிட 3.1 மீட்டர் குறைவு என்பது குறிப்பிடத்தக்கது.

அண்ணா பல்கலைக்கழக நீர்வள மைய இயக்குநர் எம்.கார்மேகம், "சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் கடந்த 30 ஆண்டுகளில் 40 பாசனக் குளங்கள் நகரமயமாக்கலால் அழிக்கப்பட்டுவிட்டன. அண்மையில் கூட கொரட்டூர், அம்பத்தூர் பாசனக் குளங்கள் மூடப்பட்டுவிட்டன. தற்போது சென்னை நகரில் உள்ள 38 கோயில் குளங்கள்தான் நிலத்தடிக்கு நீரூட்டம் செய்யும் மையங்களாகச் செயல்பட்டு வருகின்றன" என்கிறார்.

1960—ல் தி.மு.க. அரசால் கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் தாலுகாவில் உள்ள வீராணம் ஏரியிலிருந்து சென்னைக்கு தண்ணீர் கொண்டுவர திட்டமிடப்பட்டது. குழாய்களில் ஏற்பட்ட கீறல்கள், ஊழல் புகார்களுக்கு இலக்காகி 1970 களில் அத்திட்டம் கைவிடப்பட்டது. 1993—ல் சென்னையில் தண்ணீர் பஞ்சம் தலைவிரித்தாடியது. குழாய் மூலம் நீர் விநியோகம் 4 மாதங்கள் முற்றிலும் நிறுத்தப்பட்டது. இதனால் அப்போது ஆட்சியிலிருந்த அ.தி.மு.க. அரசு புதிய வீராணம் திட்டம் என்ற பெயரில் அதற்கு புத்துயிரூட்ட முயன்றது. ஆனால் வீராணம் ஏரிப்பாசன விவசாயிகள் எதிர்ப்பால் அது கைவிடப்பட்டது.

1996—ல் மீண்டும் ஆட்சிக்கு வந்த தி.மு.க. வீராணம் திட்டத்தை



சி.பி.சிங்

முழுமையாக ஒதுக்கிவைத்துவிட்டு ஆந்திராவிலிருந்த கிருஷ்ணா நீர் திட்டம் மூலம் தண்ணீர் கொண்டுவர திட்டமிட்டு செயல்படுத்தியது. கடந்த 2 ஆண்டுகளாக சராசரியாக நாளொன்றுக்கு 25 கோடி லிட்டர் நீர் இதன் மூலம் சென்னை வருகிறது. திட்டமிட்டபடி முழுமையாக செயல்பட்டால் நாள்தோறும் 95 கோடி லிட்டருக்கும்மேல் நீர் இதன்மூலம் கிடைக்கும். இது அதிக செலவுசெய்து வீராணத்திலிருந்து கொண்டு வரத் திட்டமிட்டதை விட (நாளொன்றுக்கு 18 கோடி லிட்டர்) லாபகரமானதாகவே உள்ளது.

சென்னையிலிருந்து 50 முதல் 60 கி.மீ. தொலைவிலுள்ள ஆரணியாறு, கொரட்டலையாறு போன்றவற்றில் இருந்தும் தண்ணீர் எடுக்க திட்டமிடப்பட்டு வருவதாக சி.பி.சிங் தெரிவிக்கிறார். தற்போது செங்கல்பட்டு மாவட்டத்தில் சில விவசாய கிணறுகளிலிருந்து மணிநேர அடிப்படையில் விலைபேசி தண்ணீர் எடுக்கப்பட்டு சென்னைக்கு கொண்டுவரப்படுகிறது.

இப்படி கிணறுகளில் இருந்து நீர் எடுப்பதும், அண்டை மாநிலங்களில் இருந்து நீர் பெறுவதும் நிரந்தரமானத் தீர்வு அல்ல. நிலத்தடி நீரை மேம்படுத்தும் ஏரி, குளங்களை மூடியதே நிலத்தடி நீர்மட்டம் குறையக் காரணம். எனவே இருக்கும் குளங்களை ஆக்கிரமிப்பு அகற்றி மறுஉருவாக்கம் செய்வதும், வாய்ப்புள்ள இடங்களில் புதிதாக நீர்நிலைகள் அமைப்பதும் நிலத்தடி நீரை மேம்படுத்தும் வழிமுறைகளாகும்.

தற்போது, புதிதாகக் கட்டப்படும் வீடுகளில் கட்டாயம் மழைநீர் சேமிப்பு அமைப்புகள் இருக்கவேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதனை கடுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும். மேலும், வணிக நிறுவனங்களும், தொழிற்சாலைகளும் தண்ணீரை அதிகப்படியாகப் பயன்படுத்துவதால் அவற்றை கட்டுப்படுத்துவதுடன் கட்டணமும் நிர்ணயிக்க வேண்டும். அவர்கள் எடுக்கும் நிலத்தடி நீரின் அளவையும் தீவிரமாகக் கண்காணிக்க வேண்டும். இல்லையேல் நாளை சென்னையில் தவிக்கும் வாய்களுக்கு தண்ணீர் கிடைக்காது.

–சிட்டு

www.padippakam.com

# இந்துஸ்தான் லீவரை புறக்கணிப்போம்!

## பாதரச எதிர்ப்பு உண்ணாவிரதப் போராட்டம்

பச்சைப் பட்டாடை போர்த்தி வந்தோரை எல்லாம் மகிழ்ச்சியடையச் செய்யும் 'மலைகளின் இளவரசி' கொடைக்கானலின் அழகை நஞ்சாக்கி அச்சுறுத்துகிறது இந்துஸ்தான் லீவர் நிறுவனத்தின் பாதரச ஆலைக் கழிவு. மக்கள் நடமாட்டம் மிக்க மூஞ்சிக்கல் பகுதியில் சுமார் 5,000 கிலோவுக்கும் மேல் கண்ணாடித் துண்டுகளும் பாதரசமும் அடங்கிய நச்சுக் கழிவுகள் அலட்சியமாக கொட்டப்பட்டு இருப்பதை பசுமை அமைதியும் பழநிமலை பாதுகாப்புக் குழுவும் கண்டறிந்ததன் பின்னர் வெளிவரும் செய்திகள் நம்மை கலங்க வைப்பவையாக இருக்கின்றன.

ஆயிரக்கணக்கான கிலோ அளவில் இக்கழிவு நீண்டகாலமாக சாதாரணமான, அப்பாவி பழைய பொருள் வியாபாரிகளின் தலையில் கட்டப்பட்டு வந்திருக்கிறது. தனியாயிருக்கும் வரை வெள்ளையாய் சிரிக்கும் பாதரசம் தண்ணீர், மண் என சூழலில் கலக்கும்போது மீதைல் பாதரசமாக மாறி, அழியாத் தன்மையுடைய கொடிய நச்சாக மாறுகிறது. சாதாரணமான பாதரசம் உடலில் கலந்தால் 0.01% அளவே உடலில் சேரும். ஆனால் மீதைல் பாதரசம் 100% ஈர்க்கப்பட்டு பாதிப்பை ஏற்படுத்துகிறது. ●

இந்துஸ்தான் லீவரின் பாதரச நச்சை வெளிப்படுத்திய பசுமை அமைதியும் பழநிமலை பாதுகாப்புக் குழுவும் பல்வேறு மக்கள் அமைப்புகளையும், தொண்டு நிறுவனங்களையும் முன்னாள், பணியாளர்களையும் பொதுமக்களையும் ஒருங்கிணைத்து கடந்த மார்ச் 7 ஆம் நாள் பாதரச எதிர்ப்பு பேரணி நடத்தின.

இதையடுத்து மார்ச் 8 ஆம் நாள் முதல் பாதரச வெப்பமானி தயாரிக்கும் பணியை இந்நிறுவனம் நிறுத்திவிட்டது. அந்தப் பகுதியை ஆய்வு செய்த தமிழக



தற்போதைய பாதரச பணியாளர்களும், முன்னாள் பணியாளர்களும் குறிப்பாக தொழிற்சாலையின்



பாதரசப் பிரிவில் பணியாற்றியோர் பல்வேறு உடல்நலக் கோளாறுகள் ஏற்படுவதாக புகார் கூறுகின்றனர். 1993 முதல் 1997 வரை பாதரச வெப்பமானி சிப்பமிடும் பிரிவில் பணியாற்றிய ஆர்.விஜயலட்சுமி கூறுகிறார்,

*"நான் வெப்பமானி சிப்பமிடும் பிரிவில் பணியாற்றும்போது எனக்கு அடிக்கடி மயக்கம் வரும். வெப்பமானி உடைந்தால் பாதரசம் சிதறும். அப்போது எனக்கு மயக்கம் வரும். உடனே உடன் பணியாற்றும் பணியாளர்கள் என்னை தூக்கிச் செல்வார்கள். சிறிது நேரத்தில் சரியாகிவிடும். மேற்பார்வையாளர் என்னை வேறு பிரிவுக்கு மாற்றுவார். அப்போது எனக்கு எந்தப் பிரச்சினையும் இருக்காது. நான் சிப்பமிடும் பிரிவுக்கு சென்றால் உடனடியாக எனக்கு அந்த பிரச்சினை ஏற்படும். தற்போது எனக்கு தீராத, கடும் வயிற்றுவலி உள்ளது".*

மாசுகட்டுப்பாட்டுவாரிய அறிக்கைப்படி அந்த தொழிற்சாலைக்கு அளிக்கப்பட்டிருந்த மின்சாரம், தண்ணீர் இணைப்புகள் அரசால் துண்டிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், இந்துஸ்தான் லீவர் தான் குவிந்திருக்கும் பாதரசக் கழிவுகளை தற்போதைய தொழிலாளர்களின் மூலம் அள்ளிக் குவித்து வருகிறது, தடயங்களை மறைத்து வருகிறது. பணியாளர்களுக்கு மருத்துவ பரிசோதனை என போலி நாடகம் நடத்தப்பட்டு வருகிறது என்று குற்றம்சாட்டி,

பாதரசமில்லா மாற்று முறையில் வெப்பமானி தயாரிக்க வலியுறுத்தியும், பாதரசக் கழிவுகளை அறிவியல் பூர்வமாக அப்புறப்படுத்தக்கோரியும், முன்னாள் மற்றும் இந்நாள் தொழிலாளர்களுக்கு பசுமை அமைதியின் மேற்பார்வையில் நடத்தப்படும் மருத்துவ பரிசோதனை

படிப்பகம்

www.padippakam.com



மற்றும் அதற்கான ஆயுட்கால மருத்துவச் செலவை ஏற்கக் கோரியும், முன்னாள் பணியாளர்களின் இறப்பிற்கு தகுந்த இழப்பீடு வழங்கக் கோரியும், கொடைக்கானல், பழனிமலை, பெரியகுளம் பகுதி மக்கள் பாதரச நஞ்சால் பாதிக்கப்பட்டிருப்பதை வெளிப்படையாக ஒப்புக்கொண்டு நிவாரணம் வழங்கக் கோரியும்,

உலக பூமி நாளான ஏப்ரல் 22 ஆம் நாள் கொடைக்கானல் கே.சி.எஸ். திடலில் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தப்பட்டது. பசுமை அமைதி இயக்கமும், பழனிமலை பாதுகாப்புக் குழுவும் முன்னாள் பாதரசப் பணியாளர் நலச்சங்கமும் தமிழக பாதரச எதிர்ப்புக் கூட்டணியில் உள்ள 22 அமைப்புகளும் சேர்ந்து இப்போராட்டத்தை நடத்தின. முன்னாள் பணியாளர் எஸ்.ஏ. மகேந்[illegible] தலைமையில் நடைபெற்ற போராட்டத்திற்கு அ[illegible]ஜா, ராஜாமுகமது, ரகுநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

**அமெரிக்கா உட்பட மேலை நாடுகளில் தடை செய்யப்பட்ட நச்சுக் கழிவுகள் இந்தியாவுக்கு கொண்டு வந்து குவிக்கப்படுவதற்காக அமெரிக்கன் என்ற வகையில் வெட்கப்படுகிறோம்!**

இதனை தொடங்கிவைத்து உரையாற்றிய நவ்ரோஸ்மோடி (பசுமை அமைதி), "இந்துஸ்தான் லீவரின் நச்சாக்கும் செயல்பாடுகள் இவ்வளவு வெளிப்படையான பின்னரும் நமது இந்திய சுற்றுச்சூழல் அமைச்சகம் மௌனமாயிருப்பது நகைப்பாயுள்ளது. ஆபத்தான நச்சுப்பொருட்களைக் கையாளும் தொழிலாளர்களின் பாதுகாப்பு, நமது சுற்றுச்சூழல் பாதுகாப்பில் இந்திய அரசின் கொள்கையற்ற போக்கை இது காட்டுகிறது. நமது சூழல் அமைச்சகம் உடனடியாக பாதரச பயன்பாட்டை த[illegible] செய்யும் சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும்" என்றார்.

சிறப்புரையாற்றிய, சுற்றுலா வந்த அமெரிக்காவைச் சேர்ந்த மாணவர் குழுவின் தலைவர் கிரேக், "நாங்கள் நேற்று முதலே 24 மணிநேர உண்ணாவிரதத்தை தொடங்கிவிட்டோம். அமெரிக்கா உட்பட மேலை நாடுகளில் தடை செய்யப்பட்ட நச்சுக் கழிவுகள் இந்தியாவுக்கு கொண்டுவந்து குவிக்கப்படுவதற்காக அமெரிக்கன் என்ற வகையில் வெட்கப்படுகிறோம்" என்றார்.

"மலருக்கு நோகாமல் தேனீ தேன் எடுப்பதைப்போல மனிதன் இயற்கையை பயன்படுத்த வேண்டும். ஆனால் அதற்கு மாறாக வளர்ச்சியின் பெயரால் நமது சுற்றுச்சூழல் மிக மோசமாக பாதிக்கப்படுகிறது. அரசியல் கட்சிகளுக்கு இதில் அக்கறை இல்லை. சூழலைக் காக்க எழுப்பும் குரல் சுதந்திரம் காக்கும் குரலாகும்" என்றார் மக்கள் குடியுரிமைக் கழக மாநில (த.நா&புதுவை) இணைசெயலர் வழக்கறிஞர் ச.பாலமுருகன்.

புதிய கல்வியின் சார்பில் உரையாற்றிய இணை ஆசிரியர் அசுரன், "இந்தியாவின் குப்பைத் தொட்டியாக தமிழகம் மாற்றப்பட்டு வருகிறது. இந்துஸ்தான் லீவரின் நச்சுச் செயல்பாடுகள் குறித்து மாநில அளவில் செய்திகள் எடுத்துச் சொல்லப்படவேண்டும். நமது கோரிக்கைகளை இந்துஸ்தான் லீவர் ஏற்றுக்கொள்ள மறுத்தால் உள்ளூரளவிலும் உலகளவிலும் இந்துஸ்தான் லீவரின் தயாரிப்புகள் அனைத்தையும் மக்கள் புறக்கணிக்கக்கோரி பிரச்சாரம் செய்ய வேண்டும்" என்றார்.

காங்கிரஸ் கட்சியின் திண்டுக்கல் மாவட்ட பொதுச்செயலாளர் ஆரோக்கியசாமி, உரிய நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் 'தீக்குளிப்பேன்' என்றார். மேலும், மக்கள் குடியுரிமைக் கழக பொருளாளர் ஜெசிந்தா, 'பீப்பிள்ஸ் வாட்ச்' கதிர், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த செல்லையா, தி.மு.க. நகரச் செயலர் மாயன், காங்கிரஸ் நகரச் செயலர் ஜான்சன், 'பசுமை அமைதி' மனோ, பத்திரிகையாளர் நித்தின் மற்றும் ஜான்சி, செல்வி, மாரியம்மாள், தபிப்தாள், ஜெயக்குமார், அகஸ்டின் செல்லத்துரை, இருதயராணி, சந்திரன் உட்பட பலர் உரையாற்றினர். ஜியாஸ் முகமது கோரி வரவேற்புரையாற்றினார். பழனிமலை பாதுகாப்புக் குழுவைச் சேர்ந்த மோகன் கவிதை படித்தார்.

சுற்றுச்சூழல் மாசுபாட்டிற்கு எதிராக அன்று திரண்டிருந்த கூட்டம் நம்பிக்கை தருவதாக இருக்கிறது. இந்துஸ்தான் லீவரை நல்வழிக்கு, நம் வழிக்கு கொண்டுவருவதற்கான செயல்பாடுகள் உள்ளூரோடு நின்றுவிடாமல் உலகளவில் விரிவுபடுத்தப்படவேண்டும். இது சுற்றுச்சூழலை மதிக்காது, மாசுபடுத்தும் பிற தொழிற்சாலைகளுக்கு ஒரு பாடமாக இருக்க வேண்டும்.

*–செல்லக்கிளி*

www.padippakam.com

வானமே உருகிச் சிதறுவதுபோல ஓயாத மழையாக இருந்தாலும் சரி, தலைக்குமேலே எரிமலை பொங்குவதைப்போல கொளுத்துகிற வெயிலாக இருந்தாலும் சரி நம்மால் தாங்க முடிகிறதா? வசைச்சொற்கள் மழையையும் சூரியனையும் திட்டித் தீர்க்கும்.

அந்த வசைச் சொற்களை வீசுவதற்கு முன்பு அவை ஏன் அப்படி நிகழ்கின்றன என்பதைப்பற்றி ஒரு கணமேனும் சிந்தித்திருக்கிறீர்களா? அப்படிச் சிந்தித்துத் தெளிந்திருந்தால் அந்த வசைச் சொற்கள் உங்கள் வாயிலிருந்து வராது. ஏனென்றால் அதற்கு நாமே காரணம். மனித நடவடிக்கைகளின் விளைவாக பூவுலகம் சூடானதன் *(Global Warming)* விளைவுகளே இவை.

ஒரு அணு ஆயுதப்போர் நிகழ்ந்தாலோ அல்லது விண்வெளியில் சுற்றிக்கொண்டிருக்கும் ஏதேனுமொரு துணைக்கோள் பூமியின் மீது மோதினாலோ உயிர்களின் வாழ்க்கைக்கு எவ்வளவு பாதிப்பு ஏற்படுமோ அதேயளவு பாதிப்பு பூமி சூடாவதாலும் ஏற்படும்.

18ஆம் நூற்றாண்டின் தொழிற்புரட்சியின் தொடக்கம்தான் இதற்கு ஆணிவேர். தொழிற்புரட்சியால் தொழிற்சாலைகள், மின்சார நிலையங்கள், வாகனங்கள், பண்ணைகளின் எண்ணிக்கை அதிகரித்தது. இவற்றால் வளிமண்டலத்தை சூடாக்கும் கரியமிலவாயு, மீத்தேன், நைட்ரஸ் ஆக்சைடு போன்ற பசுமை இல்ல வாயுக்களின் வெளியீடு அதிகரித்தது. இந்த அதிகரிப்பானது புவியின் வெப்பநிலையை அதிகரித்ததால் புவியின் காலநிலையில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

கடும் வறட்சி, வெள்ளப்பெருக்கு, கடல்மட்டம் உயர்வு, சில தாவர, விலங்கினங்கள் அழிவு என பல பாதிப்புகள் இதனால் ஏற்படும்.

வடதுருவத்தில் உள்ள பனிப்படலத்தின் அளவானது 1960 ஆம் ஆண்டுகளில் இருந்ததைவிட இப்போது 10% குறைந்துவிட்டது. பனி உறைந்துகிடக்கும் கால அளவானது 2 வாரங்களுக்கும்மேல் குறைந்துள்ளது. கடந்த சில ஆண்டுகளில் ஆர்க்டிக் பகுதியில் உள்ள பனிப்பகுதியின் தடிமன் 40% குறைந்துள்ளது.

1912 முதல் இன்றுவரை கிளிமஞ்சரோ மலைப்பகுதியில் உள்ள பனிப்பகுதி 75% இழக்கப்பட்டுவிட்டது. கிழக்கு சைபீரியாவின் பைகால்ஏரி குளிர்காலத்தில் 11 நாட்கள் தாமதமாக உறைகிறது. வெனிசுலா நாட்டின் மலைமுகடுகளில் 1972—ல் 6 பனித்தட்டுகள் காணப்பட்டன. இப்போது 2 மட்டுமே உள்ளன. அமெரிக்காவின் வாசிங்டன் நகரில் செர்ரி மலர்கள் 1970களைவிட இப்போது 7 நாட்கள் முன்னதாகவே பூக்கின்றன. இந்தியாவில் புயலடித்து உயிர்ப்பிழந்த ஒரிசாவில் வறட்சியும் உயிர்களைப் பிடுங்குகிறது.




படிப்பகம்

www.padippakam.com

*1998—ல் இந்தியாவில் வீசிய வெப்பக்காற்றால் சுமார் 2500 பேர் இறந்தனர்.*

காலநிலை மாற்றம் தொடர்பாக ஏற்படும் இத்தகைய நிகழ்வுகளை எதிர்கொள்வதற்காக, புவியை சூடாக்கும் வாயுக்களின் வெளியீட்டைக் குறைப்பதற்காக 1997—ல் ஜப்பானின் கியோட்டோ நகரில் 39 தொழில்மய நாடுகள் கையெழுத்திட்ட ஒரு ஒப்பந்தம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. 2008—2012ஆம் ஆண்டுகளில் உலகின் கரியமிலவாயு வெளியீட்டை 1990ஆம் ஆண்டில் இருந்ததைவிட 5.2% குறைப்பதே இதன் நோக்கம்.

இதுபோல காலநிலை மாற்றம் தொடர்பான அறிவியல், தொழில்நுட்ப, சமூக, பொருளாதாரத் தகவல்களைத் திரட்டி, ஆராய்ந்து, மனித நடவடிக்கைகளால் ஏற்படும் காலநிலை பாதிப்புகளை அளவிட காலநிலை மாற்றம் தொடர்பான நாடுகளிடையேயான குழு ஒன்றும் உள்ளது. இதனை ஐ.நா. சூழல் திட்டமும் உலக நிலவியல் அமைப்பும் சேர்ந்து உருவாக்கின. இதில் உலகம் முழுவதிலும் இருந்து ஆயிரக்கணக்கான விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர்.

1750 ஆம் ஆண்டு வளிமண்டலத்தில் 280 பிபிஎம் (பத்துலட்சத்தில் இவ்வளவு) அளவுக்கு கரியமில வாயு இருந்ததாக கணக்கிடப்பட்டு உள்ளது. இது 31% அதிகரித்து தற்போது 367 பி.பி.எம்.ஆக உள்ளது. இது மேலும் விரைவாக எதிர்பாராத வகையில் அதிகரித்து வருகிறது என்று காலநிலை மாற்றத்திற்கான நாடுகளிடையேயான அமைப்பு தெரிவிக்கிறது. 2100 ஆம் ஆண்டு புவியின் சராசரி

## காலநிலை மாற்றத்தால் ஏற்படும் பொருளாதார இழப்பு

1960 ஆம் ஆண்டுமுதல் இயற்கைப் பேரிடர்களின் இழப்பை கண்காணிக்கும் மூனிச் ரி (Munich Re) என்ற அமைப்பானது கரியமில வாயு உள்ளிட்ட பசுமை இல்ல வாயுக்களின் வெளியீடு குறைக்கப்படாவிட்டால் ஏற்படவிருக்கும் பொருளாதார இழப்புகளை மதிப்பிட்டு ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளது. இந்த அறிக்கையில் உலகம் முழுவதுமுள்ள காப்பீட்டு நிறுவனங்கள், ஐ.நா.சூழல்திட்டத்தின் நிதிச்சேவைப்பிரிவு ஆகியோர் அளித்த தகவல்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

வெப்பமண்டலப் பகுதிகளில் தொடர்ந்து வரும் புயல்கள், கடல்மட்டம் உயர்வதால் ஏற்படும் நிலம் இழப்பு, மீன்வளச் சேதம், வேளாண்மை, நீர்விநியோகம் போன்றவற்றால் உலகிற்கு ஏற்படும் இழப்பு ஆண்டுக்கு 14,30,000 கோடி ரூபாய் என்று காப்பீட்டு நிறுவனங்கள் மதிப்பிட்டுள்ளன.

2050 ஆம் ஆண்டைய நிலை எப்படி இருக்கும் என்று கணித்துள்ள இந்த அறிக்கையானது,

மாலத்தீவு, மார்சல்தீவு, மைக்ரோனேசியப் பகுதிகளில் மொத்த தேசிய உற்பத்தியில் 10%க்கும் மேல் இழக்கப்படும் என்கிறது.

கடல்மட்ட உயர்வால் ஏற்படும் வெள்ளப்பெருக்கிலிருந்து வீடுகள், தொழிற்சாலைகள், மின்சார நிலையங்கள் போன்றவற்றை பாதுகாப்பதற்காக ஆகும் செலவு ஆண்டுக்கு 4,700 கோடி ரூபாயாகும். வங்காள தேசமும் சிறிய தீவுநாடுகளும் இதனால் அதிகம் பாதிக்கப்படும்.

அலையாத்திக் காடுகள், பவளப்பாறைகள், கழிமுகப்பகுதிகள் போன்ற சூழல் அமைவுகள் பாதிக்கப்படுவதால் ஏற்படும் இழப்பு ஆண்டுக்கு 3,25,000 கோடிகளாகும். இந்த அழிவு இயற்கைப் பேரிடர்களின் பாதிப்பை மேலும் அதிகரிக்கிறது.

கரியமிலவாயு வெளியீடானது தொழில்மய காலத்திற்கு முன்பு இருந்ததைப்போல மும்மடங்காகும்போது, அதனால் ஏற்படும் வறட்சி, வெள்ளம், தீ போன்றவற்றால் வேளாண்மை, வனங்களுக்கு 2 லட்சம் கோடி ரூபாய் மதிப்புக்கு இழப்பு ஏற்படும்.

இந்தக் கணிப்பில், பொதுச்சுகாதாரம், நீர்மேலாண்மைக்காக மட்டும் அமெரிக்கா மேலதிகமாக 1,40,000 கோடி ரூபாயை செலவிட வேண்டியிருக்கும் என்கிறது. (அண்ணன் ஜார்ஜ் புஷ் கவனத்திற்கு).

ஒருகோடிக்கும் மேல் மக்கள் தொகையுள்ள நகரங்கள் உலகளவில் அதிகரித்து வருவதும், அதிகரித்துவரும் உயர்ந்த கட்டடங்களும், புறநகர் குடிசைப்பகுதிகளும் இயற்கைப் பேரிடர்கள், காலநிலை மாற்றத்தின் ஆபத்தை அதிகரிக்கின்றன. 1950-ல் நியூயார்க் மட்டுமே இத்தகைய மாநகரமாக இருந்தது. இன்று 20 நகரங்கள் பிரம்மாண்டமாக உருவெடுத்துள்ளன. இவற்றில் 16 வளரும் நாடுகளில் உள்ளன என்பது குறிப்பிடத்தது. இந்தியாவின் மும்பை, சீனாவின் சாங்காய், மெக்சிகோ நாட்டின் மெக்சிகோ நகரம், பிரேசிலின் சாவோ பவுலோ ஆகியவையும் இவற்றில் அடங்கும்.

www.padippakam.com

வெப்பநிலையானது ஒரு டிகிரி சென்டிகிரேடு முதல் 5.8 டிகிரி சென்டிகிரேடு வரை அதிகரிக்கலாம் என்று தற்போது கணக்கிடப்பட்டு உள்ளது. இது 50 ஆண்டுகளுக்கு முன்பு அளவிடப்பட்டதைப்போல 50% அதிகமாகும்.

இதனால் அடிக்கடி புயல், வறட்சி, கடல்மட்டம் உயர்வு, கடலரிப்பு, விவசாயம் அழிவு, சூழல் அமைவு பாதிப்பு ஏற்படும். கடல்மட்டம் உயர்ந்தால் உலகின் கடலோரப் பகுதிகள் பெரும்பாதிப்புக்கு உள்ளாகும். கடலோர புளோரிடா, லூசியானா போன்ற அமெரிக்க மாகாணங்களும் நைல் வடிநிலப்பகுதி, மாலத்தீவு வங்காள தேசம் போன்றவற்றில் மனிதர்கள் வாழ முடியாத சூழல் ஏற்படும்.

வெப்ப அதிகரிப்பால் நுரையீரல் நோய்கள் போன்றவை அதிகரிக்கும் கொசு, உண்ணிகள் போன்றவை அதிகம் பரவுவதால் நோய் பரவும், டெங்கு காய்ச்சல், மலேரியா, மூளை காய்ச்சல் போன்றவை அதிகரிக்கும். காலநிலை மாற்றம் தொடர்பான நாடுகளிடையேயான குழுவின் தலைவரான முனைவர். ராபர்ட் வாட்சன்,

“புவி சூடாதலால் வெப்பமண்டலப் பகுதிகளில் வேளாண் விளைச்சல் குறையும். ஏற்கனவே பட்டினி தாண்டவமாடும் அப்பகுதிகள் மேலும் பாதிக்கப்படும். வரலாற்றுச் சான்றுகளை தொகுத்துப் பார்க்கும்போது



ராபர்ட் வாட்சன்

கடந்த ஆயிரம் ஆண்டுகளில் 20 ஆம் நூற்றாண்டே மிக வெப்பமானது என கண்டறியப்பட்டு உள்ளது. 1990கள் தான் மிகவும் சூடான 10 ஆண்டுகளாகும். 1861 முதல் உள்ள ஆவணங்களின்படி 1998ஆம் ஆண்டே மிகவும் சூடான ஆண்டு” என்கிறார்.

புவியின் காலநிலையில் ஏற்பட்டுள்ள இந்த மாற்றங்கள் நம்மை அதிர்ச்சியடையச் செய்கின்றன. இந்த மாற்றங்களில் தொழில் வளர்ச்சியடைந்த நாடுகளுக்கு குறிப்பாக அமெரிக்காவுக்கு மிகப்பெரும் பங்கு உண்டு. உலக மக்களின் 4% பேரை மட்டுமே கொண்டிருக்கும் அமெரிக்கா உலக கரியமிலவாயு வெளியீட்டில் 25% விழுக்காட்டை வளிமண்டலத்தில் கலக்கிறது. எனவே காலநிலை மாற்றத்தை சீர்படுத்துவதில் அமெரிக்காவுக்கு முக்கிய பங்கு உள்ளது.

ஆனால் அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ் எடுத்துள்ள முடிவு உலக மக்களுக்கு பெரும் அதிர்ச்சியூட்டுவதாக இருக்கிறது. 88 முறை கைதட்டல் வாங்கி தனது முதலாவது நிதிநிலை அறிக்கையை புஷ் தாக்கல் செய்தபோது பல வரிகுறைப்புகளைச் செய்தார். இது சுற்றுச்சூழலுக்கான செலவில் கைவைக்கும் என பலரும் அஞ்சினர். அவ்வாறே தற்போது, குடிநீரில் உள்ள ஆர்சனிக்கின் அளவை குறைப்பதற்கான நிதி ஒதுக்கீட்டைக் குறைத்ததோடு கரியமிலவாயு வெளியீட்டைக் குறைக்கும் கியோட்டோ ஒப்பந்தத்திலிருந்து விலகுவதாகவும் அறிவித்துள்ளார்.

இது உலக நாடுகளின் கடும் எதிர்ப்பைப் பெற்றுள்ளது. ஜெர்மன் அதிபர் ஜெர்ஹார்டு ஸ்குரோடர், “உலகின் காலநிலை மாற்றத்திற்கு அமெரிக்காவே பொறுப்பேற்கவேண்டும். ஏனெனில் உலகின் பெரிய பொருளாதார நாடாகவும், அதிக ஆற்றல் நுகர்வோராகவும் அமெரிக்கர்கள் உள்ளனர்” என்கிறார்.



ஜார்ஜ் புஷ்

பிரான்சு அதிபர் ஜாக்குயிஸ் சிராக், “அமெரிக்கா ஏற்கிறதா மறுக்கிறதா என்பதைப் பற்றி கவலைப்படாமல் நாம் கியோட்டோ முடிவுகளை

படிப்பகம்

www.padippakam.com

நடைமுறைப்படுத்துவோம்" என்கிறார். சீன வெளியுறவு அமைச்சகமோ "இது பொறுப்பற்றத்தனம்" என்று விளாசுகிறது. ஐரோப்பிய நாடாளுமன்ற பசுமைக்குழு "அமெரிக்க எண்ணெய் நிறுவனங்களான *EXXON*, *TEXACO*, *CHERRON* போன்றவற்றைப் புறக்கணிக்க வேண்டும். அமெரிக்கா வந்தாலும் வராவிட்டாலும் நாம் செயல்படுத்துவோம்" என்று அறைகூவல் விடுத்துள்ளது.

டென்மார்க் சுற்றுச்சூழல் அமைச்சர் ஸ்வென்ட் ஆகென், "அமெரிக்கா உலகின் பெரிய நாடாக இருக்கலாம். ஆனால் எங்களுக்கு கட்டளையிட முடியாது" என்று கொதிக்கிறார். மேலும், "விரைந்த நடவடிக்கைகள் மூலம் ஜப்பான், ரசியாவை இந்த ஒப்பந்தத்தில் கொண்டுவர வேண்டும்" என்கிறார்.

"புஷ் உண்மையிலேயே சூழலைக் காப்பதிலும் பணத்தை சேமிப்பதிலும் ஆர்வமுள்ளவராக இருப்பாரேயானால் முதலில் வாகன எரிபொருட்களுக்கான மானியத்தை நிறுத்தட்டும்" என்று கொதிக்கிறார் சியாரா கிளப் என்ற அமெரிக்க சுற்றுச்சூழல் அமைப்பின் நிர்வாக இயக்குனர் கார்ல் போப்.

அமெரிக்கா தற்போதைய தனது கரியமிலவாயு வெளியீட்டில் 30 விழுக்காட்டை குறைத்தால் தான் 1990ஆம் ஆண்டு நிலையைவிட 7% குறைக்க முடியும். ஆனால் கலிபோர்னியாவின் மின் தட்டுப்பாட்டையும் பொருளாதார பிரச்சினைகளையும் முன்வைத்து தட்டிக்கழித்து உலக மக்களை இன்னலுக்கு உள்ளாக்கியுள்ளது. இதேவேளை உலக கரியமில வாயு வெளியீட்டில் 11% பங்குவகிக்கும் சீனா 1997 முதல் 1999 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தனது மொத்த கரியமிலவாயு வெளியீட்டில் 17% குறைத்துள்ளது.

ஜார்ஜ் புஷ் அமெரிக்க அதிபர் தேர்தலில் போட்டியிட்டபோதே இவர் 'பெருவணிக நிறுவனங்களின் வேட்பாளர்' என்று அடையாளம் காட்டியது 'மல்ட்டி நேசனல் மானிட்டர்' என்ற இதழ். அதை மிகச்சரியாக வெளிப்படுத்தியிருக்கிறார் ஜார்ஜ்புஷ். தன் நாட்டு மக்களின், தனக்கு வாக்களித்த மக்களின் நலனைக்கூட காவுகொடுத்து, பூமியின் நலனை அடகுவைத்து பன்னாட்டு வணிகப் பெருமுதலாளிகளை வாழவைக்கப் பாடுபடும் இந்த அரசியல்வாதியை முறியடிக்க பசுமை அணியினர் முனைப்பாக களம் இறங்க வேண்டியது அவசியம்.

-அசுரன்

## நாம் என்ன செய்யலாம்?

- மின்சாரம் உள்ளிட்ட ஆற்றல் வளங்களை சிக்கனமாகப் பயன்படுத்தலாம்.
- வீடுகள், அலுவலகங்கள் கட்டும்போது இயற்கையாகவே காற்றோட்டமும் வெளிச்சமும் இருக்கும்படி கட்டலாம்.
- சிறிய விசயங்களுக்கெல்லாம் வாகனப் பயணம் செய்வதை தவிர்த்து தொலைபேசியை பயன்படுத்தலாம்.
- ஒரு எக்டேர் காடு ஆண்டுக்கு 13.6 டன் கரியமில வாயுவை உறிஞ்சி ஆக்சிசனாய் வெளியிடுகிறது. எனவே மரம் நடலாம்.
- தளைகள் மட்கி அதிக கரியைக் கொண்டிருப்பதால் உழும்போது ஆக்சிசனுடன் சேர்ந்து கரியமில வாயுவாகிறது. இதனால் ஒரு எக்டேர் வயலில் இருந்து ஆண்டுக்கு 2.7 டன் கரியமிலவாயு வெளியாகிறது. அளவோடு உழுவதன் மூலம் இதனை தவிர்க்கலாம்.
- காற்றாலைகளை ஆண்டுக்கு 30% அதிகரிப்பதன்மூலம் 15 அனல்மின் நிலையங்களை மூடலாம்.
- சூரியஒளியை மின்சாரமாக மாற்றும் கருவிகளின் விலையை குறைப்பதன் மூலம் மாசற்ற மின்உற்பத்தி பெருக வழிகோலலாம்.
- ஆக்சிசன், ஹைட்ரஜனை சேர்த்து மின்சாரம் தயாரிக்கும் எரிகலன்களை பயன்படுத்தலாம். இதனால் உருவாவது மின்சாரமும் தண்ணீரும்தான். தற்போது விண்வெளிகளில் இது பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இப்படி இன்னும்... இன்னும்... எத்தனையோ வழிகளில் செயல்பட்டு பசுமை உலகம் படைக்கலாம்.

www.padippakam.com

# நீங்க சைவமா?

தற்போதைய சைவ உணவுப் பழக்கம் உலகளவில் அதிகரித்து வருகிறது. சாதி ரீதியாக உயர்ந்தவர்கள் என்று தம்மை அழைத்துக்கொண்டவர்களைப் பார்த்து சைவத்துக்கு மாறியவர்கள் உண்டு. தற்போது, உணவுப் பழக்கமே அதிகரித்துவரும் பல நோய்களின் காரணமாக கருதப்படுவதால் மருத்துவர்களின் ஆலோசனைப்படி சைவ உணவுக்கு மாறியவர்கள் பலர். வேகவைக்காத பொருட்களையே உண்டு வாழும் சிலரும் உள்ளனர்.

அன்பும் பாசமும் கட்டிப்போடும் உறவுமுறைகளைக் கூட வணிகமயமாக்கிவிட்ட உலக வணிகக் கூட்டம் இதை மட்டும் விட்டுவைக்குமா என்ன? தற்போது உலகந்தழுவிய அளவில் இயற்கை வேளாண் உணவானது ஒரு பெரும் சந்தையாக உருவாகியுள்ளது. கடந்த ஆண்டு (2000) இதன் சந்தை மதிப்பு சுமார் 1500 கோடி ரூபாய். இந்த ஆண்டு இது 4700 கோடி ரூபாயாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. என்கிறார் முனைவர். ஜாக்கி ஆலன் கியூலியானோ. அவர் மேலும் கூறும் செய்திகளைப் படியுங்கள்.

முன்பு சிறு, குறு விவசாயிகளே இயற்கை வேளாண்மை சந்தையை கையில் வைத்திருந்தனர். அவர்களால் தேவையை சமாளிக்க முடியாததால் சந்தையில் இப்போது பெரும் வணிக நிறுவனங்கள் இறங்கியுள்ளன. ஆதாயத்தை அள்ளிக் குவிப்பதற்காக களத்தில் இறங்கியுள்ள இந்த வணிக நிறுவனங்களால் இப்பொருட்களின் தரம் குறித்த சந்தேகம் எழுந்துள்ளது. சமய, இன ரீதியான, உடல் நலம் சார்ந்த பல ஐயப்பாடுகளும் எழுந்துள்ளன.

மேலும் விலை குறைப்பு போன்ற அதிரடி நடவடிக்கைகள் மூலம் பெருநிறுவனங்களால் தாம் வீழ்த்தப்படுவோம் என்றும், இயற்கை (கரிம) வேளாண்மைப் பொருள் எவை என்பதை தீர்மானிப்பதிலும் இந்த நிறுவனங்கள் தம் வலிமையை பயன்படுத்தும் என்றும் விவசாயிகளிடம் அச்சம் ஏற்பட்டுள்ளது.



நீண்டகாலமாக தொழில்முறை பண்ணைகளில் வளர்க்கப்படும் விலங்குகளுக்கான உணவாக பயன்படுத்தப்பட்டு வந்த சோயாவானது தற்போது மனிதர்களுக்கான உணவாகவும் ஆகியுள்ளது. மான்சாண்டோ நிறுவனமானது ரவுண்டப் ரெடி சோயாவை அறிமுகப்படுத்தியுள்ளது. இது அவுர்களின் ரவுண்டப் ரெடி களைக்கொல்லியை தாங்கி வளரும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளதால் இதில் அதிக நஞ்சு பயன்படுத்தப்படுகிறது. இவ்'வாறு விளைவிக்கப்படும் காய்கறிகளையோ உணவுப் பொருட்களையோ உண்பது எவ்வளவு ஆபத்தானது!

தற்போது சைவ உணவாக விற்கப்படும் சில உணவுப் பொருட்களில் முட்டை, பால், வெண்ணெய், விலங்கு கொழுப்பு, கடலுணவுகள், மீன், கோழிக்கறி போன்றவை சேர்க்கப்படுகின்றன. எனவே 'தூய' அல்லது 'வீர' சைவக்காரர்கள் குறிப்புகளைக் கவனமாகப் படித்து வாங்குங்கள்.

ஜெலட்டின் பல உணவுப் பொருட்களில் பயன்படுத்தப்படுகிறது. கால்நடைகளின் தோல்,

படிப்பகம்

www.padippakam.com

எலும்புகளை வேகவைத்தே இது தயாரிக்கப்படுகிறது. சிட்ரிக் அமிலம் எலுமிச்சையிலிருந்து தயாரிக்கப்படுகிறது என்பது நாமறிந்ததே. ஆனால் விலங்கு திசுவிலிருந்தும் இது தயாரிக்கப்படுகிறது.


உணவுப் பொருட்கள் கெட்டுப்போகாமல் பாதுகாக்கவும், அவற்றுக்கு வாசமூட்டவும் லாக்டிக் அமிலம் பயன்படுத்தப்படுகிறது. இறைச்சிக்கூடங்களில் புளிக்கவைத்தல் நடைபெறும்போது கிடைக்கும் துணை பொருளே இது. மேலும் இரத்தம், தசைநார் திசுக்களில் இருந்தும் தயாரிக்கப்படுகிறது.

பீட்டாகரோட்டீன், கொழுப்பு அமிலம், வைட்டமின் பி12 போன்றவை இறைச்சி கூடங்களில் விலங்கு திசுக்களில் இருந்து தயாரிக்கப்படுகின்றன. கரும்பு சர்க்கரை (சீனி)யைக்கூட நீங்கள் சைவத்தில் சேர்ப்பது சரியல்ல. காற்றுபுகாத கலத்தில் வாட்டப்பட்ட எலும்புக் கரிதான் கரும்புச்சர்க்கரையை சுத்திகரிக்கவும், வண்ணமூட்டவும் பயன்படுத்தப்படுகிறது. சர்க்கரைப் பாகானது இந்த கரியாலான வடிப்பான் வழியே செலுத்தப்படும்போது வண்ணம் எடுக்கப்படுகிறது. மேலும் கரும்பு அறுவடையின்போது வயல்கள் எரிக்கப்படுவதால் அதனுள் தங்கியிருக்கும் எலிகள், தவளைகள், பாம்புகள், நரிகள் போன்றவை எரித்துக்கொல்லப்படுகின்றன.

ஜாக்கி ஆலனின் இந்தக் கருத்துகளோடு மேலும் சில அம்சங்களையும் நாம் பார்க்கலாம். தற்போது மரபீனி மாற்றம் செய்யப்பட்டு உருவாக்கப்படும் உணவுப் பயிர்களின் நிலையைப் பாருங்கள். எடுத்துக்காட்டாக அதிக தண்ணீரை தாங்க பாம்பு அல்லது தவளையின் மரபணு ஒரு பயிரில் சேர்க்கப்படலாம். இதனை சைவமாக எப்படிக் கருதுவது?, இதனால் மரபுரீதியாக மனிதர்களிடம் ஏற்படும் பாதிப்புகளை யாரறிவார்?

கவர்ச்சிகரமான பொதிகளில் வரும் பெருநிறுவனங்களின் தயாரிப்புகளில் இத்தகைய எந்த ஆபத்தும் இருக்கலாம். எனவே இயற்கை உரங்களை பயன்படுத்தி இயற்கை வேளாண்மை செய்யும் நம்மூர் இயற்கை விவசாயிகளின் விளைபொருட்களை வாங்குதலே சாலச்சிறந்தது.

-காத்தான்



மாணவர்களே! கடந்த இதழின் 24 ஆம் பக்கத்தில் வெளியிடப்பட்டிருந்த பாலைவனக்கப்பலை வெட்டி, கட்டிவிட்டீர்களா? இத்துடன் ஒப்பிட்டு ஒட்டி, சரிபார்த்துக்கொள்ளுங்கள்.

www.padippakam.com

# “இயற்கையை அழிக்கும்போது மனிதத்தன்மையும் அழியும்!”

நேர்காணல்



ஞானி

***உலகமயமாக்கல் போக்கில் பன்னாட்டு, உள்நாட்டு முதலாளிகளின் சுரண்டல் களமாக இயற்கை வளங்கள் மாற்றப்பட்டு உள்ளன. இந்த சூழலில் ஒரு மார்க்சியவாதி/ இலக்கியவாதி என்கிற வகையில் தங்களுடைய கருத்துக்களை கூறுங்கள்.***

நான் ஒரு தமிழிலக்கிய மாணவன். மார்க்சியத்தின் மீது எனக்குள்ள நேசத்திற்கு அளவில்லை. கிராமங்களில் வளர்ந்தவன். நொய்யல் ஆற்றங்கரையில் எங்கள் ஊர் உள்ளது. நொய்யலாற்றின் பல்வேறு பரிமாணங்களும் எங்களுக்கு நன்றாகத் தெரியும். பின்னர், புன்செய் நிலங்கள் அதிகமுள்ள கிராமத்திற்கு எங்கள் குடும்பம் குடிபெயர்ந்தது. கிராமங்கள் இயற்கைச் சூழலில், எளிய மனிதர்களோடு நான் வாழ்ந்தேன். இன்றும் கிராமத்து நினைவுகள் என்னுள் பசுமையாக இருக்கின்றன. இப்போது அதே கிராமங்களில் இயற்கைச் சூழல் மாசுபட்டுள்ளது. நல்ல தண்ணீராக இருந்த கிணறுகள் இன்று உப்புக்கரிக்கின்றன. மரங்கள், பெருமளவு அழிக்கப்பட்டுவிட்டன.

இலக்கியத்தின் மீது நாட்டங்கொண்டோர் இயற்கைச் சூழல் மீது அன்பு வைப்பர். இயற்கை வளமுடன் இருந்தால்தான் மற்ற அனைத்து உயிர்களும் நலமுடன் இருக்க முடியும். இலக்கியத்தை நேசிக்கிறோம் என்றாலே உண்மையில் மனிதர்களை நேசிக்கிறோம், இந்தப் புவியை நேசிக்கிறோம், உயிர் இனங்களை நேசிக்கிறோம் எனறெல்லாம் பொருள்படும். சுற்றுச்சூழல் என்பது இலக்கியத்தில் இருந்தோ மனித/உயிரின வாழ்க்கையிலிருந்தோ பிரிக்க முடியாத ஒன்று.

நொய்யல் இன்று வறண்டுவிட்டது. காவிரியின் நீர் உரிமை பறிபோய்க் கொண்டிருக்கிறது. காவிரியை முதன்முதலில் பார்த்தபோது எனக்கேற்பட்ட மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. அதேபோல கடலை முதன் முதலில் பார்த்தபோதும் உணர்ந்தேன். இயற்கையோடு, மாசு இல்லாத சூழலோடு மனிதன் வாழவேண்டும். மனிதன் அதை இழந்துவிடக்கூடாது. விவிலியத்தில் “ஆன்மாவை இழந்த பிறகு என்ன பெற்றும் பயன் இல்லை” என்று சொல்லப்படுவது போல் இயற்கைச் சூழலை இழந்த பிறகு என்ன பெற்றும் அதனால் விளையும் பயன் என்ன? என்ற கேள்வியை நாம் ஒவ்வொருவரும் கேட்டுக்கொள்ள வேண்டியது அவசியம்.

***உங்களது இளமைக்கால அனுபவங்களைக் கூறியுள்ளீர்கள். அதற்கும் இன்றைய சூழலுக்கும் இடையிலுள்ள மாற்றம் பற்றி என்ன கருதுகிறீர்கள்?***

இன்று உலகம் மிக குரூரமாக மாறிக்கொண்டிருக்கிறது. முன்பைவிட பணத்திற்கு அடிமையாகும்போக்கு அதிகரித்துவிடட்டது. மனிதர்களெல்லாம் பொய்யர்களாக மாறிக்கொண்டிருக்கிறார்கள். இதற்கு அரசியல் மட்டுமல்ல பொருளியல் காரணமும் மிகமுக்கியம். இது உலக அளவில் நேர்ந்துகொண்டிருக்கிறது. நுகர்வியம் பயங்கரமான வடிவெடுத்துக் கொண்டிருக்கிறது.

இன்று கல்வி என்பது அறிவியல், கணிதம் போன்றவற்றில் தேர்ச்சி பெற்று பொறியாளராக, கணிணியாளராக மேற்குலகு நோக்கிப் போவது போன்றவற்றை நோக்கிய வெறித்தனமாக மாறிவிட்டது. ஆசிரியர்களிடத்தில் அன்பு இல்லை. வெறித்தனமாக மாணவர்களின் மூளைக்குள் “அறிவை”த் திணிக்கும் போக்கே காணப்படுகிறது. மெட்ரிக் பள்ளிகளில் மாணவர்களின் சுதந்திர உணர்வையெல்லாம் அழித்து விடுகின்றனர். கலை உணர்வு எந்த வகையிலும் இருந்துவிடக்கூடாது. பொழுது போக்கு, சினிமா, விளையாட்டு இப்படி இருக்கலாம். மற்றபடி ஓவியம், இலக்கியம் என்று இருந்துவிடக்கூடாது என்றே கருதுகின்றனர்.

கோவையில் மரங்கள் பெருமளவு

இலக்கியவாதி, இயற்கை வேளாண்மையின் ஆதரவாளர். பன்னாட்டு நிறுவனங்களின் ஆபத்து பற்றி நீண்டகாலமாக எச்சரித்து வருபவர். மார்க்சியம் தமிழ் மண்ணுக்கேற்ற வகையில் செழுமைப்படுத்தப்பட வேண்டும் என்று கூறி வருபவர், தமிழ்த் தேசிய விடுதலையில் நாட்டம் கொண்டவர். தமிழுலகில் தனக்கென தனியிடம் பிடித்த, கோவையில் வசிக்கும் திரு.ஞானி அவர்கள் புதிய கல்விக்காக வழங்கிய நேர்காணல் இது.

படிப்பகம்

www.padippakam.com

குறைந்துவிட்டது. சாலைகளை அகலப்படுவதாகக் கூறி சிவானந்தா காலனிப் பகுதியில் ஒரே இரவில் ஐம்பதுக்கும் மேற்பட்ட மரங்கள் வெட்டப்பட்டன. காடுகள் நாசமாக்கப்பட்டு வருகின்றன. நிலத்தடி நீர் வெகு ஆழத்திற்குச் சென்று விட்டது. கோவை, ஈரோடு மாவட்டங்களின் சில பகுதிகளில் ஆயிரம் அடிக்கு நிலத்தடி நீர் சென்று விட்டது. சாக்கடைகள் எங்கும் பரவி நாசப்படுத்துகின்றன. மனிதர்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகின்றனர். மனிதத்தன்மை குறைந்து வருகிறது. இயற்கை எந்த அளவுக்கு அழிகிறதோ அதே விகிதத்தில் மனிதத்தன்மையும் அழியும்.

"இயற்கையை நாம் ஆதிக்கம் செலுத்தினால் முதல் தலைமுறையில் நமக்கு ஆதாயம் இருப்பதுபோலத் தெரியும். ஆனால் அடுத்தடுத்த காலங்களில் இயற்கையே நமக்கு எதிரியாக மாறும்!"

*- ஏங்கெல்ஸ்*

### எல்லாவற்றிற்குள்ளும் தமிழைப் பார்க்கின்ற இலக்கியவாதி தாங்கள். சூழலியல் அழிவு என்பதை தமிழ் மொழியோடு எப்படி உறவுபடுத்துகிறீர்கள்?

என்னுடைய காலத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் தீவிரமான தமிழ்ப்பற்றுடன் முன்னுக்கு வந்தது. தெ.பொ.மீ., திரு.வி.க, சேதுபிள்ளை போன்ற தமிழறிஞர்கள் ஏராளமானோர் இருந்தனர். இவர்கள் தமிழில் ஊறியவர்கள். தமிழை நேயத்தோடு எடுத்துச் சொல்வார்கள். கேட்க இனிமையாக இருக்கும். தமிழ் அன்று ஏறுமுகத்தில் இருந்தது. அண்ணாதுரையின் சொற்பொழிவுகள் அப்போதுதான். தமிழ் உணர்வு இயல்பாக இருந்தது. செயற்கையாக இல்லை. அடுக்குமொழி என்கிற வகையில் செயற்கையாக மாற்றிய சூழல் இருந்தபோதும் தமிழ் உணர்வு இருந்தது.

இந்த நேசம் என்பது பரவலாக இருந்தது. உறவினர்கள் மீது நண்பர்கள் மீது இயற்கையின் மீதும் இருந்தது. இயற்கை செழிப்பாக இருந்தது. என்ன கவலையோடு நீங்கள் இருந்தாலும் ஆற்றங்கரையில் உட்காரும்போது கவலை பறந்துவிடுகிறது. வானத்தை நேசிக்காமல் இருக்க முடியாது. சூரியன் எவ்வளவு கொள்ளை அழகு. மனம் நெகிழ்ந்து போகிறது. இதே நெகிழ்வுதான் தமிழிலக்கியம் முழுவதும் இருக்கிறது. அது பக்தி என்ற பெயரில் இருக்கலாம். சங்க இலக்கிய இயற்கைக் காட்சிகளில் இந்த நெகிழ்ச்சியை நாம் காண்கிறோம். மொழி என்பது நமக்குத் தாய்தான். நமது அறிவுணர்வை மொழியிடமிருந்துதான் பெற்றிருக்கிறோம்.

இடையில் ஆங்கிலம் புகுந்தது. தமிழ் விரட்டப்படுகிறது. தமிழ் நமக்குப் பாட மொழியாக இருந்த காலத்தில் நாம் மனிதனாக இருந்தோம். இயல்பாகக் கேள்விகள் கேட்டு அறிவை வளர்த்துக் கொண்டோம். ஆசிரியர்கள் அன்புடையவர்களாக இருந்தார்கள். நிர்வாகம் நமக்குச் சுதந்திரம் கொடுத்தது. இன்று பணம் கொள்ளையிட நல்ல தொழிலாக ஆங்கிலம் வந்து சேர்ந்துள்ளது. ஆங்கிலக் கல்வியானது ஆசிரியர்களையும், மாணவர்களையும் சுதந்திரமின்றி இயந்திரமாக்கியுள்ளது. தமிழ் ஒதுக்கப்படுகிறது, கேவலப்படுத்தப்படுகிறது. தமிழில் என்ன இருக்கிறது என்று கேட்கப்படுகிறது. இப்படியெல்லாம் நிலைமை மாறுகிறது.

### உலகமயமாக்கல் போக்கில் தமிழகத்தின் சுற்றுச்சூழல் பிரச்சினைகளை எப்படிப் பார்ப்பது?

மார்க்சியத்துக்கும் சூழலியலுக்குமான இன்றியமையாத உறவைப் பற்றி முதலில் கூற விரும்புகிறேன். ஒரு காலத்தில் அறிவியல் தொழில்நுட்பம் வளரவேண்டும், உற்பத்தி பெருகவேண்டும், உற்பத்தி சாதனங்கள் பெருகவேண்டும், நிறைய பொருளுற்பத்தி நடக்கிறபோதுதான் பரவலாக்க முடியும், எல்லோருக்கும் எல்லாம் கிடைக்கும் என்கிற கருத்து இருந்தது. மார்க்சிடம் இந்தக் கருத்துண்டு. ஸ்டாலினிடமும் இந்தக் கருத்து தீவிரப்பட்டு இருந்ததாக நாம் சொல்லமுடியும். ஆனால் அது நடக்கவில்லை.

இரஷ்ய அதிபர் பிரஷ்னேவுக்கு சல்சனேட் என்பவர் எழுதிய கடிதத்தில் "காடுகளை அழிக்கிறீர்கள், நிலத்தைத் தோண்டுகிறீர்கள், கனிமங்கள் எடுக்கிறீர்கள், பெட்ரோல் எடுக்கிறீர்கள் இதெல்லாம் தொடர்ந்து செய்து இதுவரை நாட்டில் 10 அல்லது 15 சதமானவர்களின் வாழ்க்கைதான் மேம்பாடு அடைந்துள்ளது. (அது உண்மையில் வாழ்க்கை மேம்பாடுதானா என்ற கேள்வியையும் இந்த இடத்தில் நாம் கேட்டுக்கொள்ளலாம்?) 15% பேருக்கு வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த இத்தனை அழிவுகளை நாம் செய்திருக்கிறபோது, காடுகள், பொட்ரோல், இரும்பு போன்றவை இன்னும் எவ்வளவு காலத்திற்கு இருக்கும்?. இன்னும் 50 அல்லது 100 ஆண்டுகளுக்குப் பின்னர் உள்ள மக்களுக்கு எங்கே சோசலிசம்?" என்று கேட்டார். இது ஒவ்வொருவரும் கேட்கவேண்டிய கேள்வியாக இன்னும் உள்ளது என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்.

ஏங்கெல்ஸ் தன் காலத்திலே எச்சரிக்கை விடுத்திருந்தார். "இயற்கையை நாம் ஆதிக்கம் செலுத்தினால் முதல் தலைமுறையில் நமக்கு ஆதாயம் இருப்பதுபோலத் தெரியும். ஆனால் அடுத்தடுத்த காலங்களில் இயற்கையே நமக்கு எதிரியாக மாறும்" என்றார். இதை நாம் கவனிக்கவில்லை.

தமிழகத்தைப் பொறுத்தவரை சூழலை நாசமாக்கும் ஸ்டெர்லைட், டுபாண்ட், சாய ஆலைகள், சவுத் இந்தியா விஸ்கோஸ், இன்னும் ஏராளமான தொழிற்சாலைகள் மாசுக்களைக் கொட்டுகின்றன. தமிழகத்தின் இயற்கைவளம் நாசமாகிறது. உற்பத்திப் பெருக்கம், தொழில்பெருக்கம் என்று கூச்சல் போடுகிறார்கள். தொழில் பெருக்கத்தின் உடனடி

www.padippakam.com

விளைவு ஆறுகள், நீர்நிலைகள் நாசமாகின்றன. நிலத்தடி நீர் மாசுபடுகிறது. விஸ்கோஸ் ஆலையைக் கொண்டு 'தொழில் பெருக்கம்' நடைபெற வேண்டுமென்றால் இலட்சக்கணக்கான மரங்களை வெட்டி வீழ்த்தியாக வேண்டும், கூழாக்கவேண்டும். இயந்திரங்கள் பிரமாண்டமானவை அதற்கு இரைபோடுவதென்றால் காடுகளை அழித்துக்கொண்டேயிருக்க வேண்டும். தமிழ்நாட்டில் வெட்டுவதோடு மட்டுமல்ல, கேரளாவில், கர்நாடகாவில் இன்னும் பிற இடங்களில் வெட்ட வேண்டும். சாயப்பட்டறைகளால் நொய்யல் நாசமாகிவிட்டது. திண்டுக்கல், ஆம்பூர், வாணியம்பாடி பகுதிகளில் தோல் பதனிடும் ஆலைகளால் நிலத்தடிநீர் நாசம். இந்த நாசங்களை பெருமளவில் பார்த்துவிட்டோம்.

வேளாண்மையில் வேதி உரங்கள், பூச்சிக்கொல்லிகளால் ஏரி குளங்கள் நஞ்சாகிவிட்டன. மீன்கள், தவளைகள், நண்டுகள் போன்றவை அழிந்து குறைந்து வருகின்றன. புதுப்புது வகையான நோய்கள் பரவி வருகின்றன.



நாடு என்பது விவசாயிகள், தொழிலாளர்கள், பழங்குடியினர் என்று சொல்லப்படுகின்ற 90 சதம் மக்களுக்கானது. ஒரு சதமும் அரை சதமும் இருக்கின்ற முதலாளிகளுக்கானதல்ல. ஆனால் இவர்கள்தான் 'தேசபக்தி' பற்றிப் பேசுகின்றனர். இவர்கள் 80,90 சதம் மக்களைப் புறக்கணித்துவிட்டு 10 சதம் மக்களுக்காகத் 90% மக்கள் உழைக்கவேண்டும். கூலிகளாக வேண்டுமென்கின்றனர். நிலத்தை இழக்கவேண்டும். நிலவளங்களை இழக்கவேண்டும். உடல் நலம், உரிமை, சுதந்திரம் அனைத்தையும் இழந்துவிட வேண்டும் என்கின்றனர். இறுதியில் இதே 10 சதம் பேருக்காவது வாழ்க்கை மிஞ்சப்போகிறதா? அதிகாரம் செய்கிறவன் என்றைக்கும் நல்லவனாகவும் இருக்க முடியாது, நிம்மதியாகவும் இருக்கமுடியாது. பணத்திற்குத் தன்னைப் பலி கொடுத்தவன் அடிமை.

அந்நிய நிறுவனங்கள் சந்தைப் பொருளாதாரம், உலகமயமாக்கல் முறையில் தெளிவாகப் பேசுகின்றனர். மூலதனத்திற்குத்தான் உலகம் சொந்தம், இயற்கை வளங்கள் சொந்தம். தேசங்களின் இறையாண்மைக்கு அர்த்தம் இல்லை. மூலதனம் எங்கு வேண்டுமானாலும் சுதந்திரமாகப் போகலாம் வரலாம். இப்படி 'கொள்கை' சொல்கிறார்கள். அரசியல்வாதிகளும் மறுக்காமல் ஏற்றுக்கொள்கின்றனர். இறுதியில் 80 சதம் மக்களின் நாட்டை அவர்களிடமிருந்து பறித்து, அவர்களின் வாழ்க்கை, பண்பாடு, வரலாறு போன்றவற்றை அழித்துவிட்டு, எவனுக்கோ உரியதான் பண்பாடு, வரலாறு, பொருளியல் ஒன்றைத் திணிக்க விரும்புகின்றனர். இந்தச் சிக்கலோடுதான் உலகின் சூழலியல் சிக்கல் பின்னிப் பிணைந்துள்ளது. தமிழ்நாட்டில் சூழலியல் சிக்கலும் ஒட்டு மொத்தச் சிக்கலின் ஒரு பகுதிதான். இந்தப் போக்கை எள்ளளவும் நாம் ஒப்புக்கொள்ள முடியாது.

அந்நிய நிறுவனங்கள் வந்துவிட்டன. உலகச் சூழலில் இதைத் தவிர்க்க முடியாது என்று பேசுவது முட்டாள்தனம் மட்டுமல்ல அயோக்கியத்தனமும்கூட. பன்னாட்டு நிறுவனங்களுக்குச் சேவகம் செய்யும் இங்குள்ளவர்களுக்குக் கிடைப்பது பிச்சை. அரசியலும், பொருளியலும் படித்துவிட்டு எவனுக்கோ சேவகம் செய்கிறவர்கள் இவர்கள். அவன் இவர்களுக்குக் கூலி கொடுப்பான். வாலைக் குழைத்து வேலை செய்வார்கள். வாலைக் குழைக்கும் இவன் தன்னைச் சுதந்தரவான் என்று நினைத்துக் கொள்கிறான். நமக்கு அறிவுரை வேறு சொல்வான். நீங்கள் ஒத்துப்போய்விடுங்கள், மறுத்துப் பயனில்லை என்று சொல்வான்.

நம் மக்களுக்குச் சரியான கல்வி கொடுக்கப்படவில்லை. சரியான கல்வி கொடுக்கப்பட்டிருந்தால் கேள்வி கேட்டிருப்பார்கள். ஆசிரியர்களுக்கு அக்கறை இல்லை. படிப்பாளிகளுக்கு அக்கறை இல்லை. மக்களை இவர்கள் கைவிடுகிறார்கள். இப்படி ஒரு மோசமான சூழலில்தான் சுற்றுச்சூழலை நாம் பேணவேண்டியுள்ளது.

சென்னைக்கருகில் நவீன இறைச்சித் தொழிற்சாலை தொடங்க இருப்பதாக அண்மையில் செய்தி வெளியாகியுள்ளது. சூழல் கேட்டோடு, இப்படி வெட்ட ஆரம்பித்தால் எத்தனை நாட்களுக்கு தமிழகத்து ஆடு, மாடுகள் வரும்.

தொழில் வளர்ச்சி என்கிற பெயரில் விவசாயிகளின் சுதந்திரம் பறிக்கப்பட்டுள்ளது. நிலத்தோடு, கால்நடைகளோடு, பிற உயிரினங்களோடு வாழ்ந்து வந்த விவசாயிகளின் வாழ்க்கை கேள்விக்குள்ளாக்கப்படுகின்றது. நிலம் நாசமாகிறது, நீர் இல்லையென்றால் கூலிகளாக நகரத்திற்குச் செல்கின்றனர். தொழிற்சங்கங்கள், கட்சிகளுக்கு இந்தப் பிரச்சனையின் வேர்களைப் பற்றிய அக்கறை இல்லை.

அன்னிய நிறுவனங்கள் நம்மைக் கோமாளிகளாக மாற்றுகின்றன. என்ரான் நிறுவனத்துக்கு நவம்பர் மாதம் செலுத்த வேண்டிய 95 கோடி ரூபாயை மராட்டிய அரசால் செலுத்த முடியவில்லை. டிசம்பருக்கு ரூ.120 கோடி. வெட்கங்கெட்ட முறையில் பொறுப்பெடுத்துக்கொண்ட மத்திய அரசு பணத்தைக் கொடுத்தது. ஓர் அலகு (யூனிட்) மின்சாரத்தின் விலை ரூ.7 என்கின்றனர். யாரால் முடியும்? ஆக அன்னிய நிறுவனங்கள் இங்கு வந்து கொள்ளையடிப்பது மட்டுமல்ல. கேவலப்படுத்துகின்றன.

படிப்பகம்

www.padippakam.com

மக்களுக்கு வாழ்க்கையே இல்லாமல் செய்கின்றன. முதலாளிகள் நினைத்துக்கொள்கின்றனர், தமக்கு ஏதோ பெரும் இலாபம் வரப்போவதாக. முட்டாள்தனமாகப் பிரச்சாரமும் செய்கின்றனர். இந்த தேசத்தில் மனிதன் வாழ முடியுமா? என்று ஏராளமான கேள்விகள் நமக்குள் எழுகின்றன.

**வரலாற்றில் உயிர்க் குலத்தின் இருப்பிற்கே நெருக்கடியான சூழலில் நாம் வாழ்கிறோம். இந்தச் சூழலை மாற்றியமைக்கப் போகிறோமா? இல்லை அழிந்துவிடப்போகிறோமா?**

மனிதர்களின் படைப்புத் திறனை அழிக்கின்றனர். மனிதனுக்குப் பல பத்தாயிரக்கணக்கான ஆண்டுகள் வரலாறு உண்டு. இயற்கைக்கு இலட்சக்கணக்கான ஆண்டுகள் வரலாறு உண்டு. பல இலட்சக்கணக்கான ஆண்டுகளாக வளர்ந்து வந்த இயற்கையை, பரிணமித்த உயிர்களை, பிரமாண்டமான இந்த இயற்கையை கடந்த ஒரு நூற்றாண்டுக்குள், 50 ஆண்டுகளுக்குள், 25 ஆண்டுகளுக்குள், 10 ஆண்டுகளுக்குள், கடந்த 5 ஆண்டுகளுக்குள் எவ்வளவு வேகமான முறையில் மனிதர்கள் அழித்துக் கொண்டிருக்கின்றனர். எண்ணிப் பாருங்கள், இப்போதே இயற்கை கொந்தளிக்க ஆரம்பித்துவிட்டது. ஒரிசாவில் புயலால் நேர்ந்ததை பாருங்கள்.

கலிபோர்னியாவில் அடிக்கிற புயல் காற்றைப் பாருங்கள். நிலஅதிர்வு ஏற்படுகிறது. காற்று சூடேறிவிட்டது. மனிதன் தன்னைக் காப்பாற்றிக் கொள்ளும் போராட்டமாக இயற்கைச் சூழலை காக்கும் இயக்கம் வடிவெடுத்துள்ளது.

சூழல் நாசம் என்பது இயற்கை நாசம் மட்டுமல்ல. அது பல பரிமாணங்கள் மனிதனை/உயிரினங்களைப் பாதிக்கக் கூடியது. மனித உறவுகளைப் பாதிக்கிறது. எல்லாவற்றையும் பாதிக்கிறது.

***மரபீனிமாற்றத் தொழில்நுட்பம், உயிர் தொழில்நுட்பத்தின் அண்மைக்காலப் போக்குகள் குறித்து தங்கள் கருத்தென்ன?***

மரபீனி மாற்ற விதைகள் பற்றி மேற்கு நாடுகளிலேயே பெருத்த விமர்சனம் எழுந்துள்ளது. பின் விளைவுகள் என்னவாக இருக்கும் என்பது பற்றிய குறைந்தபட்ச ஆய்வுகள்கூட நடைபெறவில்லை. சோதனைகள் எதுவும் இல்லாமல் சந்தையில் கொண்டுவந்து கொட்டுகிறார்கள். வெளிப்படையாகக் கொஞ்சம், மறைமுகமாகக அதிகளவில் குவிக்கின்றனர்.

எதிர்காலத்தில் இந்த உயிரித் தொழில்நுட்பத்தை ஒடுக்குமுறைக்குரிய மாபெரும் கருவியாக மாற்றுவார்கள். அண்மையில் எம்.ஜி.சுரேஷ் எழுதிய 'அட்லாண்டிஸ் மனிதனும் ஒரு கோப்பைத் தேநீரும்' என்றொரு நாவல் வந்தது. எதிர்காலத்தில் வாழ்க்கை எப்படியிருக்கும் என்று கற்பனையாக எழுதுகிறார்.

மரபணுக்களில் மாற்றம் செய்யப்பட்டு உருவாக்கப்பட்ட உயர்தர மனிதர்கள். அவர்கள் முழு அளவுக்கு நோய்நொடிகளின் தாக்குதலின்றி இருப்பார்கள். இன்னொரு வகையான மனிதர்கள் உதிரி மனிதர்கள். இவர்கள் உழைக்க, கூலிவேலை இன்னபிற வேலை செய்கிறவர்கள். இவர்கள் முட்டாள் மனிதர்கள். மரபணுக்களில் மாற்றம் செய்து இப்படி உருவாக்கிக் கொள்ளலாம். இடையில் வழக்கமாகப் பிறந்து வளர்கின்ற இயல்பான மனிதர்களும் இருப்பார்கள். இவர்களிடமிருந்து அதிஉன்னத மனிதர்களை உருவாக்கிக்கொண்டே இருப்பார்கள். எதிர்காலத்தில் உயிரித் தொழில்நுட்பத்தில் செய்யப்படும் மாற்றங்கள், வர்க்க வேறுபாடுகள் நாம் எண்ணிப் பார்க்க முடியாத கேடான நிலையை அடையும் வாய்ப்புகள் இருக்கின்றன. உன்னத மனிதர்கள் ஒருபுறம், கலை உணர்வோ, இசை உணர்வோ அற்ற முட்டாள் மனிதர்கள் இன்னொருபுறம். எதிர்காலம் குரூரமானதாக இருக்கும். இதை மாற்ற இப்போதே நடவடிக்கைகள் தேவை.

***தனி மனிதன் திருந்தினால் எல்லாம் சரியாகிவிடும் என்கிறார்கள் இது சுற்றுச்சூழலுக்கும் பொருந்துமா?***

எதிர்காலத்தில் எதுவும் நடக்காது என்று நம்பிக்கையோடு இருக்கச் சொல்லி சிலர் சுய முன்னேற்ற நூல்கள், தியான முறைகள் போன்றவைப் பற்றிப் பிரச்சாரம் செய்கின்றனர். ஒட்டுமொத்த சமூகமே நெருக்கடியில் சிக்கியிருக்கும்போது நம்மால் அப்படி இருக்கமுடியாது. இவர்கள் சொல்வது ஒரு பொய் நம்பிக்கை. முதலாளிகளுக்கு சேவகம் செய்கிற கூலிகளைத் தயார் செய்யும் முறை தியானம். கற்றுக் கொடுப்பவனும் இதைத்தான் வியாபாரம் செய்கிறான். வியாபாரம் செய்! அதிகாரம் செய்! சூழலை நாசமாக்கு! கொஞ்சம் தியானம் செய்துவிட்டு மனத்தை அவ்வப்போது சுத்தம் செய்துகொள்!. ஒவ்வொரு நாளும் அழுக்கு வரும் தியானம் செய்து சுத்தம் செய்துகொள்! மறுபடியும் அதே செயல்களைச் செய்யலாம். காவல்துறையினரும் தியானம் செய்யலாம், கொள்ளைக்காரன், திருடன், அயோக்கியன், மதவாதி எல்லோரும் தியானம் பண்ணலாம். இப்படி ஏராளமாகக் கற்பிக்கின்றனர்.

சுற்றுச்சூழல் பற்றிய அக்கறை உடையவர்கள் இவர்களைச் சரியாக அடையாளம் கண்டு விமர்சனம் செய்ய வேண்டும். வரலாற்றில் உயிர்க் குலத்தின் இருப்பிற்கே நெருக்கடி மிக்க சூழலில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இந்தச் சூழலை மாற்றியமைக்கப் போகிறோமா? இல்லை அழிந்துவிடப் போகிறோமா? என்பது இப்போது நம் அனைவரின் முன்னாலும் இருக்கிற முக்கியமான கேள்வி.

சந்திப்பு: *மு.குமரவேல்*

படிப்பகம்

www.padippakam.com

# அந்த நள்ளிரவு விடியுமா?

போபால் சோகத்தை எவ்வளவு காலமானாலும் மறக்க முடியாது. அன்றைய சம்பவத்தால் பாதிக்கப் பட்டவர்கள் 16 ஆண்டுகளா கப் போராடி வருகின்றனர்.

போபால் 'யூனியன் கார்பைட்' தொழிற்சாலையில் விபத்தின்போது இந்தியச் சந்தைக்குத் தேவைப்படுவ தைப்போல இரு மடங்கு பூச்சிக்கொல்லிகளைத் தயாரிக்கத் தேவையான நச்சு வாயுக்கள் சேமித்து வைக்கப்பட்டிருந்தன.

போபாலில் மிக நெருக்கமாக மக்கள் வாழும் பகுதியில் 'யூனியன் கார்பைட்' தொழிற்சாலை அமைக்க அனுமதி வழங்கிய 'போபால் திட்டக் குழு' தனது கடமையிலிருந்து தவறிவிட்டது.

இந்தியாவில் லாபம் குறைந்து வந்ததால் பிரேசில் அல்லது இந்தோனேசிய நாடுகளில், ஏதாவது ஒரு நாட்டுக்கு தனது தொழிற்சாலையை இடம் மாற்றிக் கொள்ளலாமா? என அந்த அமெரிக்க பன்னாட்டு நிறுவனம் யோசித்து வந்தது. இந்த யோசனை 'போபால் சம்பவம்' நடப்பதற்கு 4 மாதங்களுக்கு முன்னால் வந்தது. ஆனால் அப்படி அது இடம் மாறவில்லை. மாறாக தனது பணத்தை சேமிப்பதற்காக அங்கேயே இருந்து அந்த் கோரமான விபத்து நடைபெறக் காரணமானது.

விசவாயுக் கசிவு நடந்த போது தொழிற்சாலையின் சுற்றுப்பகுதி சேரிகளில் இருந்த மக்களே முதலில் பாதிக்கப் பட்டனர். அவர்கள் தற்போதும்கூட தொடர் பாதிப்புக்கு ஆளாகின்றனர். பல்வேறு சுவாச நோய்கள், புற்றுநோய்கள், சிறுவயதிலேயே கண்பார்வை இழத்தல் என பல்வேறு நோய்களின் பிடியில் உழன்று வருகின்றனர் பலர். அவர்களுக்கு சரியான மருத்துவ சிகிச்சையும் கிடைப்பதில்லை.



அந்த விபத்துக்கு ஒரு சிலரை மட்டும் காரணமாகக் கூறமுடியாது. அந்தத் தொழிற்சாலை சாதாரண அளவைவிட மிகப்பெரிதாக வடிவமைக்கப் பட்டிருந்தது. அப்படி வடிவமைக்கப்படக் காரணம், மேற்கு விர்ஜீனியாவில் (அமெரிக்கா) இருந்த பொறியாளர்களே. ஏனென்றால், எவ்வளவு பெரிதாக வடிவமைக்கிறார்களோ, அவ்வளவுக்கு அவர்களுக்கு பணம் கிடைக்கும்.

அதுபோல தொழிற்சாலை நட்டமடைந்து வந்தபோது சிறந்த அதிகாரிகள் வேலையைவிட்டுப் போய்விட்டனர். எஞ்சி இருந்த அதிகாரிகளோ ஆலையில் பழசாகிப்போன இரும்புக் குழாய்களை மாற்றவில்லை. குழாய்களும் தரமான இரும்பால் தயாரிக்கப்படவில்லை. இப்படி எல்லாமே தரமாக இல்லாத நிலையில் விசவாயுக் கசிவு நடைபெற்றுவிட்டது. சம்பவமும் மிக பயங்கரமாகிவிட்டது.

—டொமினிக் லாப்பியர்

போபால் கிணறுகளில் உள்ள நீர் தற்போதும் கூட 'யூனியன் கார்பைட்' நச்சுக்களால் பாதிக்கப்பட்டிருக்கிறது. இங்கிருந்து ஒரு கை நீரை நீங்கள் அள்ளிக் குடித்தீர்களானால் நான்கு நாட்களுக்கு உங்கள் வாய் 'தீ'யால் சுட்டதுபோல் எரியும்.

ஸ்பானிய எழுத்தாளர் ஜேவியர் மோரோவுடன் இணைந்து டொமினிக் லாப்பியர் எழுதியுள்ள 'போபாலில் நள்ளிரவுக்குப் பிந்தைய 5 நிமிடம்' *(It was Five past Midnight in Bhopal)* என்ற புத்தகத்தை பாரிசில் சமீபத்தில் வெளியிட்டார்.

இப்புத்தகம் நல்ல வெற்றியைப் பெற்று விற்றால் நல்லதுதான். ஏனெனில் தற்போது பெண்களின் நோய்களுக்கான சிகிச்சையளிக்கும் மருத்துவமனையை போபாலில் நடத்திவரும் அவர் புத்தகத்தின் வெற்றிக்குப் பிறகு, மேலும் இரு மருத்துமனைகளை அமைக்க திட்டமிட்டு உள்ளார். மேலும் போபாலில் நல்ல குடிநீர் கிடைக்கவும் வழி செய்ய திட்டமிட்டுள்ளார்.

டொமினிக் லாப்பியர் ஏற்கனவே 'நள்ளிரவின் விடுதலை' *(Freedom of Midnight)*, 'மகிழ்ச்சியின் நகரம்' *(city of Joy)* என்ற இரு புத்தகங்களை எழுதியுள்ளார்.

-கு.மு.வள்ளியப்பன்

படிப்பகம்

www.padippakam.com

# மலேசியாவின் சுற்றுச்சூழல் பிரச்சினைகள் - II

மலேசியாவில் வனவிலங்குகளின் முக்கியத்துவம் எப்பொழுதும் ஒரு பொருட்டாக எடுத்துக்கொள்ளப்படுவதில்லை. காற்றுமண்டலம், தண்ணீர், காடு, வனவிலங்குகள் என்று இவற்றுக்கு இடையில் உருவாகும் ஒரு தொடர்பு சூழலியல் நிலைத்தன்மைக்கு பெரிதும் உதவுகிறது. ஆகையால் ஒரு வகை வனவிலங்குகள் இறந்துவிடுமானால் இந்த சூழலியல் நிலைத்தன்மைக்கு ஊறு விளைவிக்கக்கூடும்.

புலி, சுமத்ரா காண்டாமிருகம், யானை, உராங்உடான், முதலை என்று மலேசியாவில் 22 விதமான வனவிலங்குகள் அழிந்துவருகின்றன.

மலேசியா, அழிந்துவரும் வனவிலங்குகளை உலக அளவில் வியாபாரம் செய்வதற்கு எதிராக கையொப்பமிட்டிருந்தாலும், மலேசியாவில் நிறைய விலங்குகளும் பறவைகளும் பிடிக்கப்பட்டு சிங்கப்பூருக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

மலேசியாவில் நிலவிவரும் புகை மண்டலத்தின் காரணமாக தண்ணீரின் தரம் பாதிப்புக்கு உள்ளாகியிருக்கிறது. மலேசியாவின் சுற்றுச்சூழல் தர அறிக்கையின்படி காற்று மற்றும் தண்ணீரின் தரம் அளவுக்கு அதிகமாக மாசடைந்துள்ளது என்று



தெரிய வந்துள்ளது. இதற்கு மலேசிய சாலைகளில் உலா வரும் வாகனங்களும், தொழிற்சாலைகளிலிருந்து வெளிவரும் புகையும் தொழிற்சாலைகள் ஆறுகளின் மூலம் விடும் கழிவுகளுமே காரணமாகும்.

மலேசியா 4800 கிலோ மீட்டர் கடலோர எல்லைகளையும் பெரிய அளவிலான சதுப்பு நிலப் பகுதிகளையும், பெரிய பவளப் பாறைகளையும் 4,18,000 சதுர கிலோமீட்டர் அளவைக் கொண்ட கடலவள பொருளாதார மையத்தையும் கொண்டிருக்கிறது. இந்த ஏராளமான கடல் வளங்கள் அனைத்தும் நீண்ட காலங்களுக்கு இருக்கும் என நீங்கள் நினைத்தால் அது தவறு.

தீபகற்ப மலேசியாவில் கிழக்கு, மேற்கு கடலோர மீன்பிடிப்பு 1992ல் 4,44,718 டன்னிலிருந்து 1993ல் 4,15,335 டன்னாக குறைந்திருப்பதோடு, தொடர்ந்து குறைந்து வருகிறது. இந்நிலை நாட்டிலுள்ள மீனவர்களில் பெரும் பகுதியினரை பாதிப்பதோடு மட்டுமல்லாமல், அதிகமான மக்கள் குறிப்பாக குறைந்த வருமானம் உடையவர்களிடையே முக்கிய புரதச்சத்து உணவையும் குறைத்து விடுவதாக இருக்கிறது. நாட்டின் பொருளாதாரமும் இதனால் பாதிப்புறும்.

நாட்டின் மீன் வளமும் தொழிலும் அழிந்து வருவதற்கான மூன்று முக்கிய காரணங்கள்

- மிகையாக மீன் பிடித்தல்
- உறைவிடம் பாதிக்கப்படுதல்
- தூய்மைக்கேடு

போதிய சட்டங்கள் இல்லாமையும், இருப்பவை சரியாக நடைமுறைப் படுத்தப்படாமையும் மலேசியாவில் மீன்பிடித்தொழில் அழிந்துவருவதை அதிகப்படுத்தி வருகிறது. மீனவப் பிரச்னைகள் மாநில அல்லது கூட்டுறவு கழகங்களின் பிரச்னைகள் என்று அடையாளம் காணப்பட்டு வருகின்றன.

மீன்வள இலாகாவின் கடல்வள பூங்கா திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட தீவுகளின் பகுதிகள் பாதுகாக்கப்பட வேண்டும்.

– என்.வி.சுப்பாராவ்,
பினாங்கு பயனீட்டாளர் சங்கம்,
மலேசியா

படிப்பகம்

www.padippakam.com


இதுவே மாநில அரசாங்கத்தின் பார்வையின் கீழ் வரும்பொழுது அவை கடல்வள பூங்காவின் கீழ் பாதுகாக்கப்படமாட்டா. மேலும் கடல்வள பூங்கா சிறிய அளவிலான மீனவர்களுக்கு போதிய ஆலோசனைகளை வழங்காததால், இவர்கள் தங்கள் தேவைகளுக்காக கடலோர மீன்பிடி தொழிலில் இறங்க வேண்டியிருக்கிறது.

தொழிற்துறை வளர்ச்சி மற்றும் நவீன தொழில்நுட்பங்கள் மலேசியாவுக்குள் புகும்பொழுது இவற்றோடு சேர்ந்து இதில் பணி புரிபவர்களுக்கு ஆரோக்கியச் சீர்கேடுகளையும் பொதுமக்களுக்கும் சுற்றுச்சூழலுக்கும் கேடுகளையும் ஏற்படுத்திவிடுகிறது.

மலேசியாவில் பேராக் மாநிலத்தில் உள்ள புக்கிட் மேராவில் இயங்கிவந்த ஆசியன் அரிய மணல் ஆலை *(Asian Rare Earth Plant)* என்ற தொழிற்சாலை மலேசியாவில் உயிருக்கு உலை வைக்கும் தொழிற்சாலைகளும் உலா வருகின்றன என்பதற்கு ஒரு நல்ல உதாரணமாகும்.

1982—ல் அப்பகுதியின் சிறிய பட்டணத்தைச் சேர்ந்த ஒரு வயதான விவசாயி தொழிற்சாலையிலிருந்து வெளியேற்றப்பட்ட கழிவுப்பொருட்களை ஒரு பையில் நிரப்பிக்கொண்டு தனது மாமரத்திற்கு உரமாகப் பயன்படுத்தினார். ஆனால் அந்த கழிவுப்பொருள் மரணத்தை ஏற்படுத்தக்கூடிய அணுக்கழிவு என்று அவருக்குத் தெரியவில்லை. மிசிபிசி நிறுவனத்துக்கு பாதி அளவு சொந்தமான ஆசியன் அரிய மணல் ஆலை நிறுவனம் அந்த அணுக்கழிவுகளை லாரி லாரியாக திடல்கள், சாலை ஓரம் மற்றும் ஆறுகளில் கொட்ட ஆரம்பித்தது.

இந்த பிரச்சனை தொடர்பாக 10,000 க்கும் மேற்பட்ட அப்பகுதியின் குடியிருப்புவாசிகள் அந்த நிறுவனத்தை பினாங்கு பயனீட்டாளர் சங்கத்தின் உதவியோடு நீதிமன்றத்திற்கு இழுத்தார்கள். ஆனால் அணுக்கழிவு மூலம் நிகழ்ந்த நோயையும், மரணத்தையும் சட்ட நடவடிக்கையால் அவர்களால் நிறுத்தமுடியவில்லை. மக்கள் பேராக் அணுக்கதிர் எதிர்ப்புக் குழுவொன்றை ஏற்படுத்தி தங்களின் வேதனையைத் தெரியப்படுத்தினர். அரசாங்கத்திடம் பலமுறை முறையிட்டனர். ஆனால் பலன் கிடைக்கவில்லை.



நீதிமன்றத்தில் அந்த தொழிற்சாலையால் குழந்தைகளிடையே புற்றுநோய் ஏற்படுவது அதிகரித்து வருவதாகவும், பெண்களிடையே கருச்சிதைவு, குறைப்பிரசவம் மற்றும் குழந்தைகளிடையே உடல்ஊனம் ஏற்படுவதாக அக்குடியிருப்பு மக்கள் குற்றம் சாட்டினர்.

அப்பகுதியில் அவ்வப்போது சுகாதார ஆய்வுகளை மேற்கொண்டனர். அணுக்கதிர்வீச்சின் அபாயங்களை உறுதிப்படுத்துவதற்காக கனடா மற்றும் ஜப்பான் போன்ற நாடுகளிலிருந்து வல்லுநர்கள் கொண்டுவரப்பட்டார்கள். உயர் நீதிமன்றம் இக்குடிமக்களுக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கி, தொழிற்சாலைக்கு மூடுவிழா நடத்தியது.

ஆனால் உச்சநீதிமன்றம் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை ரத்துசெய்தது. உச்சநீதிமன்றம் என்னதான் தீர்ப்பை வழங்கியிருந்தாலும், ஆசியன் அரிய மணல் ஆலை மக்கள் எதிர்ப்பை எதிர்கொள்ள இயலாமல் தன்னிச்சையாகவே தன்னுடைய தொழிற்சாலையை மூடியது.

(தொடரும்)

www.padippakam.com

## இரசிய அணு ஆற்றல் துறை

# அமைச்சரின் ஊழல் அம்பலம்!

எல்ஸ்டின் ரசிய அதிபராக இருந்தபோது 1998 மார்ச்சில் ரசிய அணு ஆற்றல்துறை அமைச்சராக நியமிக்கப்பட்டவர் முனைவர். யீவ்ஜெனி அடமோவ். ரசிய நாடாளுமன்றத்தின் ஊழல் தடுப்புக் குழுவால் இவரது ஊழல்கள் கண்டுபிடிக்கப்பட்டதால் அவரை பதவிநீக்கம் செய்துவிட்டு, ரசிய அணுஆயுத வடிவமைப்பு ஆராய்ச்சி நிறுவன இயக்குநராக இருந்த அணு விஞ்ஞானியான அலெக்சாண்டர் மியான்த்செவ்வை அணு ஆற்றல் துறை அமைச்சராக்கியுள்ளார் ரசிய அதிபர் புதின்.



'ஊழல்' அடமோவ்

வெளிநாடுகளிலிருந்து அணுக்கழிவுகளை இறக்குமதி செய்யும் திட்டத்தை நிறைவேற்றுவதில் அடமோவ் தீவிரமாக இருந்தார். அதனால் வரும் ஆதாயத்தைவிட இழப்பே அதிகம் என்பதாலும், ரசியாவை அணுக்கழிவு கிடங்காக்கி மாசுபடுத்துவதை விரும்பாததாலும் சுற்றுச்சூழல் ஆர்வலர்களும், அணு நிபுணர்களும், சில அரசு அணு நிபுணர்களும்கூட இதனை எதிர்த்துவந்தனர். கடந்த சனவரி மாதம் ரசியாவில் 40 நகரங்களில் எதிர்ப்பு போராட்டங்கள் நடைபெற்றன.

இந்நிலையில் கடந்த மார்ச் 22 ம் நாள், அணுக்கழிவுகளை இறக்குமதி செய்வது தொடர்பான தீர்மானம் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டபோது தோல்வியடைந்தது. இதைத் தொடர்ந்து அடமோவ் பதவிநீக்கம் செய்யப்பட்டார். இரசிய சுற்றுச்சூழலின் 'நம்பர்1'எதிரி ஒழிந்தார் என்று மகிழ்ச்சி தெரிவிக்கிறார் பசுமை அமைதி இயக்கத்தின் தோபியாஸ் மியூனிச்மேயர்.

அடமோவின் நீக்கம் பசுமை அமைதிக்கும் பிற ரசிய சுற்றுச்சூழல் அமைப்புகளுக்கும் கிடைத்த வெற்றியாகும். இந்த அணுக்கழிவு இறக்குமதி நடவடிக்கையில் அடமோவ் தனிப்பட்டமுறையில் சம்பந்தப்பட்ட நாடுகளிடமிருந்து 'ஆதாயம்' அடைந்தது ஊழல் எதிர்ப்பு குழுவால் கண்டறியப்பட்டது. அந்த அறிக்கையில் 1990 முதல் அடமோவின் சட்டவிரோதமான 10க்கும் மேற்பட்ட வணிக நடவடிக்கைகள் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவர் ரசியாவிலும் வெளிநாடுகளிலும் குறைந்தபட்சம் 10 நிறுவனங்களை நிறுவியுள்ளார். எடுத்துக்காட்டாக, 1994 ஆகஸ்ட் 24 அன்று 'ஒமேகா' என்ற பெயரில் ஆலோசனை மற்றும் நிர்வாக நிறுவனமொன்றை அவர் தொடங்கினார். 1999 இறுதியில் இதை அமெரிக்காவின் பென்சில்வேனியா மாகாணத்தில் பதிவு செய்தார். அதன் சொத்து மதிப்பானது சுமார் 23 கோடியே 87 லட்சமாகும். இதில் 14 கோடியே 80 லட்சரூபாய் அடமோவின் பணம். எஞ்சியது அவரது மனைவியின் பணமாம்.

இரசிய மக்களின் எதிர்ப்புப் போராட்டம்



இரசிய அணு ஆற்றல் அமைச்சகத்துக்கு ஆயுதங்களை இறக்குமதி செய்யும் 'டெக்ஸ்நாப் எக்ஸ்போர்ட்' என்ற நிறுவனத்திற்கு அடமோவின் 'ஒமேகா'தான் ஆலோசனை வழங்கி வந்துள்ளது. இந்நிறுவனம் மூலம் மட்டும் அடமோவுக்கு மாதம் 7 லட்சம் ரூபாய் வருமானம் வந்துள்ளது. இரசிய சட்டப்படி அணு ஆற்றல் அமைச்சக ஊழியர் யாரும் தனியாக வணிகம் செய்யக்கூடாது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இப்படி ஊழலில் முழ்கியுள்ள இரசிய அணுஆற்றல் துறையிடம் இருந்துதான் நமது கூடங்குளத்திற்கு அணு உலைகள் வாங்கப்படுகின்றன. உண்மையான 'பின்னணி' என்னவோ?

-அசுரன்

படிப்பகம்

www.padippakam.com

### தாராள இறக்குமதிக் கொள்கை:

# ஏழைகளின் கையில் பிச்சை பாத்திரம்

*வந்தனா சிவா*

பிரெஞ்சுப் புரட்சிக்கு சற்று முந்தைய காலத்தில் பிரான்சு நாடு கடுமையான நெருக்கடியில் இருந்தது. உழவர்கள் பஞ்சத்தில் செத்து மடிந்துகொண்டு இருந்தனர். அப்போது நாட்டை ஆண்ட மரியா அண்டானிட்டேயிடம் மக்கள் எங்களுக்கு உண்ண ரொட்டிகூட இல்லை என்றனர். அதற்கு அவர் "ரொட்டி இல்லையென்றால் 'கேக்' சாப்பிடுங்கள்" என்றார். அதன் பின்னரே பிரெஞ்சுப் புரட்சியின் எழுச்சி தொடங்கியது.

அதேபோல் நான் ஒரு தொலைக்காட்சி கலந்துரையாடலில் உலகமயமாக்கத்தாலும், கட்டுப்பாடற்ற இறக்குமதியாலும் இந்திய மக்கள் அல்லல்படுவதை எடுத்துக்கூறியபோது ஒரு புகழ்பெற்ற பொருளியல் அறிஞர், "இனிமேல் ஏழைகளால் கூட பார்பிப் பொம்மைகளை வாங்கமுடியும்" என்று கூறினார். இந்த அவலமான சூழல் இந்தியாவெங்கும் பீடித்து வருகிறது.

அலிகாரில் பூட்டுத் தொழிலில் ஈடுபட்டிருந்த ஒரு இலட்சம் தொழிலாளர்கள் வேலையின்றி வீட்டிற்குள் முடங்கிவிட்டனர். காரணம், மிகக்குறைந்த விலையில் சீனா தனது பொருட்களை இறக்கத் தொடங்கிவிட்டது.

இதேபோன்று சமையல் எண்ணெய்த் துறையில் ஏராளமான வீழ்ச்சி. இன்னும் நூற்றுக்கணக்கான வேளாண் பொருட்களை இறக்குமதி செய்ய அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது.

இப்படிப்பட்ட இறக்குமதிகளை தொலைக்காட்சிகள் கொண்டாட்டமாக வெளியிட்டு ஆர்ப்பரிக்கின்றன. "நுகர்வோர் விழாக்கள்" தூள் பறத்துகின்றன. 'ஜானிவாக்கர் விஸ்கி இன்னும் இரண்டு கிழமைகளில்', 'இந்திய நுகர்வோர் முடிசூடா மன்னர்கள்' என்பதான அல்லோகல்லோகங்கள்.

அந்தோ இவ்வையெல்லாம் எல்லா இந்திய மக்களுக்கும் கிட்டவா போகின்றன? ஏற்கனவே ஏராளமான மக்கள் தங்களது அடிப்படைத் தேவைகளுக்குக்கூட மிகக்குறைவாகவே செலவிட




நன்றி: Down To Earth

வேண்டிய சூழலில் உள்ளனர். ஒவ்வொரு நாளும் இவர்களது வருவாய் சுருங்கிக்கொண்டே வருகிறது.

தங்களது உணவிற்காக தவசங்கள் உண்ணுவதுகூட ஊரக இந்தியாவில் 12% குறைந்துவிட்டது. இது கடந்த புதிய பொருளாதாரப் பத்தாண்டுகளில் நடந்தவை. மென்மேலும் இவர்களது வாழ்க்கைச் சூழல் மோசமாகிக்கொண்டே வருகிறது. இச்சூழலில் நமது பொருளியல் அறிஞர்கள் "ஏழைகள் இனி பார்பிப் பொம்மைகளைக் கூட வாங்க முடியும்" என்கின்றனர்!

இந்நாட்டில் பெரும்பான்மையான மக்கள் பஞ்சம், பட்டினியால் வாடுவதைப்பற்றி எவ்விதப் பார்வையும் இன்றி இந்தியாவிலுள்ள 'அறிவுஜீவிகள்' இறக்குமதியின் பெருமைக்ளை புகழ்கின்றனர். இந்த இறக்குமதி இனி கோழி, செம்மறி, வெள்ளாடு, வான்கோழி, வாத்து, முயல், மான் கறிகள் என்று தொடரும்.

நாம் நமது இறைச்சிச் சந்தையை திறந்து விட்டுள்ளோம். ஆனால் ஐரோப்பா பசுக்கிறுக்கு நோயால் தனது சந்தையை மூடிவருகிறது. 5,00,000 விலங்குக்குமேல் கொல்லப்பட்டுள்ளன. அமெரிக்காவில் உணவு

படிப்பகம்

www.padippakam.com

தொடர்பான நோய்கள் 8.1 கோடி பேர்களிடம் கண்டறியப்பட்டுள்ளன. நஞ்சான உணவை உண்டு இறந்தோர் எண்ணிக்கை 1984—இல் 2000 ஆக இருந்தது, 1994இல் இது 9000 ஆக உயர்ந்துள்ளது. இவையெல்லாம் தொழிற்சாலை இறைச்சிகளின் விளைவுகள் என்று கண்டறியப்பட்டுள்ளன. (ஆனால் நாம் வேளாண்மை, கால்நடை வளர்ப்பை தொழில்மயமாக்கக் குரல் கொடுக்கின்றோம்).

இறைச்சி இறக்குமதி என்பது இங்குள்ள ஏராளமான சிறு தொழில் முனைவோர்களை சிதைத்து விடும். ஏனெனில் மாபெரும் இறைச்சிக்கூடங்கள் அங்கு உள்ளன. அங்கு மிச்சமாகும், "கெட்டுப்போன" இறைச்சிகளை ஏற்றுமதி செய்வதற்கு அவர்கள் கூச்சப்படப்போவதில்லை.

இனி உணவுப் பொருட்களை ஆய்விற்கு உட்படுத்தாமல் இறக்குமதி செய்வதைத் தடை செய்ய வேண்டும். அதுபோல் தாவர உணவு, இறைச்சி உணவு என்று வேறுபடுத்தும் முத்திரைகளைப் பதிக்க ஆணையிட வேண்டும். இதற்கு அரசு தவறிவிட்டது. ஊழல் மயப்பட்ட ஆய்வாளர்கள் மிகஎளிதாக அனைத்து உணவுப் பொருட்களுக்கும் அனுமதியை அள்ளி வழங்கத் தயங்கப்போவது கிடையாது.

சமையல் எண்ணெய் இறக்குமதிக்கு கொடுத்த வரிவிதிப்பால் இந்திய உழவர்களுக்கு எவ்வித நன்மையும் கிடைக்கப் போவதில்லை. ஏனெனில் இது சோயா எண்ணெய்க்கு மட்டுமே பொருந்தும். இந்த செயல்பாடுகள் 'மக்கள் நல அரசு' என்பது 'ஏற்றுதி இறக்குமதி அரசாக' மாறுவதை தெளிவாகக் காட்டுகிறது. உலகச் சந்தையில் இந்தியாவின் வணிகத்திற்காக 100 கோடி மக்களின் பொருளியலை அழிப்பது ஒரு பெரும் சோகம்.

அளவு கட்டுப்பாடுகளை விலக்குவதும் அநீதியானது. ஏனெனில் இந்தியா 2005 வரை இதற்கு காலம்கேட்டது. ஆனால் அமெரிக்கா 2001 ஆம் ஆண்டிலேயே தடை நீக்கம் கேட்டு தொல்லை செய்கிறது. இந்தத் தகராறைத் தீர்த்துவைக்க உலக வணிக நிறுவனத்தின் தகராறுத் தீர்வமைப்பை அமெரிக்கா முடுக்கிவிட்டது. மேலும் இந்தியாவின் இறக்குமதிச் சட்டங்கள் போதுமானதாக இல்லை என்று தகராறு செய்து வருகிறது. குறிப்பாகச் சொன்னால், விரைவாகக் கட்டுப்பாடுகளைத் தளர்த்த வேண்டும் என்பதே அதன் அவா. ஆனால் இந்தியாவோ தனது தரப்பு நியாயங்களை வலுவாக எடுத்து வைத்துப் பேசவில்லை.

1999 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் அமெரிக்காவின் வணிகத்துறையின் சூசன் எசர்மேன்க்கும் இந்தியாவின் வணிக அமைச்சகத்தைச் சேர்ந்த என்.என்.கண்ணா என்பவருக்கும் இடையே நடந்த ஒப்பந்தப்படி 1.4.2001க்கு மேல் 715 பொருட்களுக்கு கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டன. ஏற்கனவே இருந்த கட்டுப்பாடுகளும் காலாவதியாகிவிட்டன. ஆனால் ஐரோப்பிய ஒன்றியம் இப்படிப்பட்ட கட்டுப்பாடுகளைத் தளர்த்த மார்ச் 2003 வரை கால அவகாசம் கேட்டுள்ளது.

இதே அமெரிக்கா உலகளாவிய ஒப்பந்தங்களை மீறுவதை நாம் காணமுடியும். அதற்கு அண்மைய எடுத்துக்காட்டு காலநிலை மாற்றம் தொடர்பான கியோட்டோ முடிவுகளில் கையெழுத்திட்டு விட்டு இப்போது அதனைச் செயல்படுத்த மறுத்து வருவதாகும். இத்தனைக்கும் உலகிலேயே மிகப்பெரிய மாசுபடுத்தும் நாடாக அது உள்ளது.

இந்தியா தனது உணவு உறுதிப்பாட்டையும் இறையாண்மையையும் காக்காமல் புதிய ஏற்றுமதியை குறியாகக்கொண்ட வேளாண் கொள்கைகளை உருவாக்கி ஒருபுறம் நாட்டின் உணவுப் பாதுகாப்பை கேள்விக்குறியாக்குகிறது. மறுபுறம் இறக்குமதி என்ற பெயரில் சிறு,குறு உழவர்களின் பிழைப்பில் மண்ணைப் போடுகிறது.

இந்திய வணிக அமைச்சர் தனது கொள்கை மூலம் இந்தியச் சந்தையையும், மண்ணையும், நீரையும் பொதுமக்களின் மானியமாக உலக வணிக கழகங்களுக்கு வழங்கியுள்ளார். இனி நமது அங்காடிகளில் பார்பிப் பொம்மைகள் நிரம்பி வழியும். ஆனால் நமது ஏழைகள்தான் சோற்றுக்கும், பிழைப்பிற்கும் பிச்சை எடுக்க வேண்டியிருக்கும்!

*தமிழில்: பாமயன்*

www.padippakam.com

# மலேசியத் தெருக்களில் பரிதவிக்கும் தமிழகத் தொழிலாளர்கள்

கணிணிப் பணி வாய்ப்பு, கைநிறையக் கனவுகளோடு அமெரிக்காவுக்கு விமானமேறிய நம் கணிப்பொறி வல்லுநர்கள் இத்துறையில் ஏற்பட்ட சரிவால் பணிநீக்கம் செய்யப்பட்டு திருப்பி அனுப்பப்படுகின்றனர். பில்கேட்சே உலகின் முதல் நிலை செல்வந்தர் என்ற நிலையை விட்டு கீழே இறங்கிவிட்டார். இதோ மலேசியாவுக்கு வந்த தமிழகத் தொழிலாளர் நிலையைப் பாருங்கள்.

மலேசியாவின் செர்டாங் பலாக்கோங்கில் ஒரு மின்னியல் தொழிற்சாலைக்காக கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் 145 தொழிலாளர்கள் தமிழ்நாட்டிலிருந்து அழைத்து வரப்பட்டிருந்தனர். போதிய ஊதியம், வசதிகளின்றி அவதிப்பட்டதால், ஒரு லட்சம் ரூபாய்வரை பணம் கொடுத்து வந்த நிலையிலும் தங்களை திருப்பி அனுப்பக் கோரியதால் வீட்டைக் காலிசெய்து நடைபாதையில் படுக்கவைக்கப்பட்டனர்.

"காலை 7 மணிக்கு சுமார் 2 கிலோமீட்டர் தூரம் நடந்தே வேலைக்குச் செல்லவேண்டும். ஒரு ஷிப்டிற்கு சுமார் 80 பேர் வரிசையாக நடத்தி அழைத்துச் செல்லப்படுவோம். 6 மணிக்கே புறப்படாவிட்டால் சம்பளத்தில் வெட்டுவிழும். இப்படி மாதம் முழுதும் வேலை செய்தாலும் 380 வெள்ளிதான் (ஒரு வெள்ளி= 12 ரூபாய்) ஊதியம் கிடைத்தது. எனவே திருப்பி அனுப்பக் கோரியபோது 2,000 வெள்ளி கேட்டனர். அதன் பின் 'ஓவர்டைம்' வேலையும் கொடுப்பதில்லை. இந்திய தூதரகத்தில் புகார் செய்ததால் 30 பேரை நாட்டிற்கு அனுப்பினார்கள். எஞ்சியோரை இப்படி தெருவில் தள்ளி இழுத்தடிக்கிறார்கள்" என்று துயர நிலையை சொல்கின்றனர் அந்த இளைஞர்கள்.

## தமிழகத் தொழிலாளர்களை வீதிக்கு அனுப்பிய முகவர்களை சிறைக்கு அனுப்புங்கள்!




"வெளிநாட்டு தொழிலாளர்கள் நம்நாட்டில் பணிபுரிவதற்காக நியமிக்கப்பட்டுள்ள முகவர்களை கட்டுப்படுத்துவதற்கு சட்டம் கடுமையாக இல்லாத காரணத்தினாலேயே இதுபோன்ற கொடுமையான சம்பவங்கள் தொடர்ந்து நடைபெறுகின்றன. இதற்கு முன் பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் உடனடியாக திருப்பி அனுப்பப்பட்டார்களே தவிர சம்பந்தப்பட்ட முகவர்கள் மீது அரசு கடுமையான நடவடிக்கைகள் எடுத்ததாகத் தெரியவில்லை.

அவர்களை இந்நிலைக்கு கொண்டு வந்தவர்களிடம் இருக்கின்ற சொத்துக்களை இந்த தொழிலாளர்களுக்கு பிரித்து வழங்கிய பின்பே அவர்களின் நாட்டிற்கு திருப்பி அனுப்பவேண்டும். நம் நாட்டின் மீது நம்பிக்கை வைத்து இங்கு வருகின்ற வெளிநாட்டுத் தொழிலாளர்கள் சுரண்டப்படாமலிருக்க அரசு முறையான கொள்கைத்திட்டம் ஒன்றை வரையறுக்க வேண்டும்".

*எஸ்.எம். முகமது இத்ரீஸ்,*
தலைவர், பினாங்கு பயனீட்டாளர் சங்கம்

நடைபாதையே தங்குமிடமான சோகம்



தொழிலாளர்களின் ஊதியம், பயண ஏற்பாடுகளை பேசி முடிக்கும் முன்பே வேலை அனுமதியை ரத்து செய்யமுடியாது. ஆனால் இந்நிறுவனமோ முன்பே ரத்து செய்ததால் அவர்கள் சட்ட விரோதமாக தங்கியிருப்பதாக கருதப்பட்டு, அங்கிருந்த 51 பேரும் ஏப்ரல் 11-ஆம் நாள் செமினி தடுப்பு முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

– நண்பன்

படிப்பகம்

www.padippakam.com

# பூமியை ஏன் பாதுகாக்கவேண்டும்?

நமக்கென்றிருப்பது ஒரேயொரு பூமிதான். கண்ணுக்கெட்டிய தொலைவுவரை பரந்துகிடக்கும் நிலப்பகுதியைப் பார்க்கும்போது ‘எவ்வளவு பெரிய்ய்ய்ய்ய்ய்ய்ய பூமி’ என்று மனம் வியக்கிறது. நாம் செய்யும் இந்த சிறு மாசினாலா இந்த பூமி மாசுபட்டுவிடப்போகிறது என்ற எண்ணம் ஓடுகிறது. உண்மை என்ன? விளக்கப்படமாக விளக்குகிறது அமெரிக்க வேளாண்துறையின் வெளியீடு.

பாருங்கள், படியுங்கள் நாம் செய்வது நியாயம்தானா என எண்ணுங்கள்.

① 

இந்த பூமியை ஒரு ஆப்பிளாக (கொய்யாப்பழமாக வேண்டுமானாலும்) கற்பனை செய்து கொள்ளுங்கள்.

② 


அதனை 4 சரிசமமான துண்டுகளாக வெட்டிக்கொள்ளுங்கள்.

அதில் ஒரு துண்டு (25%) நிலப்பகுதி, மீதி 75% நீர்.

③ 

நிலப்பகுதியை (ஒரு துண்டை) இரண்டாக வெட்டுங்கள்.

ஒரு பங்கில் மலைகள், பாலைவனங்கள், பனிபடர்ந்த பகுதிகள் அடங்கும்.

④ 

வாழத் தகுந்த இன்னொரு பகுதியை நான்காக வெட்டுங்கள். அதில் 3 பங்கு கடினப்பாறைப் பகுதிகள், வளமற்ற பகுதிகள், சாலைகள், நகரங்கள் போன்ற ‘விளைச்சலில்லாத’ இடங்கள் அடங்கும்.

⑤ 


இப்போது ஆப்பிளின்... மன்னிக்கவும் பூமியின் பரப்பில் 32-ல் ஒரு பங்குதான் எஞ்சியிருக்கிறது. இதன் தோல் பகுதியை உரியுங்கள்.

⑥ 

இந்த தோல் பகுதிதான் நிலப்பகுதியின் மேல்மண் பரப்பை குறிக்கிறது. கோடிக்கணக்கான மனிதர்களுக்கும் பிற உயிரினங்களுக்கும் இந்த நிலப்பரப்பிலிருந்துதான் நாம் உணவு உற்பத்தி செய்தாக வேண்டும்.

**இப்போது சொல்லுங்கள் இதை நாம் எவ்வளவு பாதுகாப்பாக பாதுகாக்கவேண்டும்?**

## ஐயோ..........



அமெரிக்காவில் வாஷிங்டனுக்கு அருகில் ஓடுகின்ற அனகோஸ்தியா ஆற்றில் காணப்படும் ‘பழுப்புநிற எருதுத்தலை பூனைமீன்’ (பயப்படாதீர்கள் Brown bullhead catfish என்கிறார்கள் ஆங்கிலத்தில்) தான் இது. ஆற்றின் அடியில் படிந்துள்ள நச்சுப் படிவுகளைத் தொட்டதால் அதன் உதட்டில் புற்று ஏற்பட்டுள்ளது. அனகோஸ்தியா ஆற்றிலுள்ள இந்தவகை மீன்களில் 55 விழுக்காடு மீன்களுக்கு உதட்டில் புற்று ஏற்பட்டுள்ளதாக அனகோஸ்தியா நீர்வடி பகுதி சங்கம் தெரிவிக்கிறது.

www.padippakam.com

சிறப்புச் செய்திகள்

கொங்கு நதி நீர் மாசு

# நீதிமன்றத்தை நம்பாதீர்கள்!

## மேதாபட்கர் எச்சரிக்கை



கோவை மாவட்டம் சிறுமுகையில் உள்ள தென்னிந்திய விஸ்கோஸ் ஆலைக் கழிவுநீரைப் பயன்படுத்தி இரும்பறை பஞ்சாயத்திற்கு உட்பட்ட பகுதிகளில் சுமார் 700 ஏக்கர் நிலத்தில் பாசனம் செய்துவருகிறது. இதனால் அப்பகுதியில் உள்ள மூலையூர், அம்மன்புதூர், மோதுூர், சிட்டேபாளையம், பெத்திக்குட்டை ஆகிய கிராமங்களின் நிலத்தடிநீர் பாதிக்கப்பட்டுவிட்டது. அந்நீர் விவசாயத்திற்கும் குடிப்பதற்கும் பயனற்றதாகிவிட்டது.

இதனை நிறுத்தக்கோரி மக்கள் போராடியும் பலனில்லை. இந்நிலையில் பல்வேறு அமைப்புகளுடன் சேர்ந்து தமிழக விவசாயம், நிலத்தடி நீர் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சங்கம் சார்பில் கடந்த 27.03.2001 அன்று பெத்திக்குட்டையில் ஒரு கண்டனப் பொதுக்கூட்டம் நடத்தப்பட்டது.

பவானி நதி பாதுகாப்புக் குழு தலைவர் டாக்டர். சத்தியசுந்தரி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் நர்மதை பாதுகாப்பு இயக்கத் தலைவர் மேதாபட்கர் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினார். அவர் பேசியதிலிருந்து....

"பவானி ஆற்றங்கரையில் உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். நர்மதையை மட்டுமல்ல அனைத்து இந்திய ஆறுகளையுமே பாதுகாக்க வேண்டும். இக்கிராமத்தைப் பார்க்கும்போது நர்மதை கரையிலுள்ள ஒரு குக்கிராமத்தைப் பார்ப்பது போலவே உள்ளது.

நீர், நிலம், காற்றை நம்பி பரம்பரையாக வாழும் மக்களில் நீங்களும் ஒருவர். இவை உங்களுக்குச் சொந்தமானவை. அரசுக்கோ அதிகாரிகளுக்கோ பணம் படைத்தவர்களுக்கோ சொந்தமானதல்ல. அப்படி அவர்கள் கற்பனைகூட காணமுடியாது. நீர், நிலம், காட்டுவளம், இயற்கை என்பவையே நமது மிகப்பெரிய சொத்து. பணத்தைவிட இந்த வளங்களே நமக்கு முக்கியம். பணமின்றி நம்மால் வாழ முடியும். ஆனால் இந்த வளங்களின்றி வாழமுடியாது. ஆனால் இவை விஸ்கோஸ் போன்ற ஆலைகளின் கழிவுகளால் நாசமாக்கப்படுகின்றன.

யாராவது செல்வந்தர்கள் இவை எங்களுக்குச் சொந்தம் என்று கூறினால், "உங்களிடம் நிறைய முதலீடு, பணம் இருக்கலாம். அதைக்கொண்டு இவற்றை உருவாக்க முடியுமா?" என்று கேளுங்கள். முடியாது!. இதுதான் உண்மையான முதல்.

இப்போது நடப்பது பணத்தின் ஆட்சிதான். பணத்தால் எதையும்

www.padippakam.com

செய்யமுடியும் என்ற நிலையின் வெளிப்பாடு தான் டெஹல்கா ஊழல். நமது நாட்டின் பாதுகாப்பு பண சக்தியின் கையில் போய்விட்டது. இன்று ஊழல் நீக்கமற எங்கும் நிறைந்துள்ளது. இயற்கை வளங்களை கொள்ளையடிப்பது பெரிய ஊழல். நதிநீர், காட்டுவளம் கொள்ளையடிக்கப்படுவதை எதிர்த்து யார் கேட்பது? என்னைப் போன்ற சுற்றுச்சூழல்வாதியல்ல, நீங்கள் கேட்கவேண்டும்.

உங்களுக்குத்தான் தெரியும் உங்கள் நிலத்தைப்பற்றி, உங்கள் தண்ணீரைப்பற்றி, உங்கள் காடுகளைப்பற்றி. இங்கு வைத்திருக்கிறீர்கள் இது குடிக்கும் நீரா? நீங்கள்தான் போராடவேண்டும். பாருங்கள்! நீர், மின்சாரத்தை யார் அனுபவிக்கிறார்கள்? 85% கிராம மக்களுக்குக் கிடைக்காத நீர் 10—15% நகர மக்களால் அனுபவிக்கப்படுகிறது. நதிநீர் என்பது கிராம மக்களின் இரத்தம். அதுபோல கிராமப்பகுதிகளில்தான் மின்சாரத் தட்டுப்பாடு இருக்கிறதே தவிர சென்னை, கோவை போன்ற நகரங்களில் மின்தட்டுப்பாடு இல்லை.

நீர் கெட்டுவிட்டது என்று ஆய்வு செய்து சான்றளிக்கிறார்கள். அதை யார் மாற்றுவது, ஏன் மாற்றவில்லை? இன்று ஊழல் அனைத்து தரப்பிலும் பரவியுள்ளது என்று பிரதமர் வாஜ்பேயே கூறியுள்ளார். நாம் யாரை நம்புவது என்றே புரியவில்லை. நீங்கள்தான் நீதிபதி, மீதி எல்லோரையும் விலைக்கு வாங்கிவிடுவார்கள்.

நமது நாட்டின் கட்சி அரசியல் மிகமோசமாக இருக்கிறது. என்ரான் போன்ற பன்னாட்டு நிறுவனங்கள் நாட்டை கொள்ளை அடிக்கின்றன. என்ரான் சொல்லும் விலைக்கு மராட்டிய அரசாலேயே மின்சாரத்தை வாங்க முடியவில்லை, நம்மால் முடியுமா? அப்படியான என்ரான் இங்கு ஏன் தேவை? அதற்கு யார் காரணம்?

கழிவுநீர் பாசனத்திற்காக நிலத்தைக் கொடுத்தவர்கள் இனி உணர்வார்கள். விஸ்கோஸ் சமூகநலப் பணிகளில் ஈடுபட்டு வருவதாகவும் நாள்தோறும் 5 லட்சம் பேருக்கு குடிநீர் வழங்கி வருவதாகவும் சொல்கிறது. அது உண்மையா?

(மக்கள் கூச்சல். கூட்டத்திலிருந்து ஒரு பெண்)

"அவங்க கழிவுனால தண்ணி கெட்டதுனாலதான தண்ணி தரவேண்டியதாப் போச்சி. அதுவும் சுத்திகரிச்சு தர்றதில்லே. ஆத்துல வாற தண்ணிய அப்பிடியே பிடிச்சி தாறாங்க. எங்களுக்கு அரசே நல்லதண்ணி தருது. வேணும்கற அளவுக்கு குடுக்குது"

இது சமூக சேவையா? நன்றாக இருந்த தண்ணீரை கெடுத்ததால்தானே தண்ணீர் கொடுக்கவேண்டியிருக்கிறது!

(மீண்டும் அப்பெண்)

"போராட்டத்துக்கு பெறகுதான் குடுத்தாங்க. அதுவும் 10, 15 நாளாகத்தான் தாறாங்க. அதுக்கு முன்னால தண்ணி தாறதில்ல"

மாசுகட்டுப்பாட்டு வாரியத்தின் மேற்பார்வையிலேயே இந்தப் பாசனம் நடைபெறுகிறது. குறைந்த செலவில் வேளாண் பொருட்களை உற்பத்தி செய்கிறார்களாம். இந்த உண்மைகளை எல்லாம் தொழிற்சங்கங்களும் புரிந்துகொள்ள வேண்டும். மும்பை போன்ற இடங்களில் தொழிற்சங்கங்கள் நம்மோடு சேர்ந்து நிற்கின்றன. இது நாம் சேர்ந்து போராடவேண்டிய விசயம் என்பதை புரிந்து கொள்ளுங்கள். வேலைவாய்ப்பு போய்விடும் என்கிறார்கள். ஏற்கனவே பொதுத்துறை நிறுவனங்கள் தனியாரிடம் ஒப்படைக்கப்பட்டு பெருமளவு தொழிலாளர்கள் வெளியேற்றப்பட்டு வருகின்றனர்.

தொடர்ந்து மக்களைத் திரட்டிப் போராடுவது என்பதுதான் சரி. நீங்கள் வழக்கு நீதிமன்றத்தில் உள்ளது என்கிறீர்கள். சட்டத்தை நம்புகிறீர்களா? உச்சநீதிமன்றத்தில் என்ன நடக்கிறது? என்ன நடந்தது என்று எனக்குத் தெரியும். நர்மதை வழக்கில் என்ன நடந்தது? நீதிபதிகளுக்குள்ளேயே கருத்துவேறுபாடு.

கீழுள்ள அதிகாரிகள் கொடுத்த செய்திகளையே நீதிபதிகள் திருப்பச் சொன்னார்கள். அவர்களுக்கு உண்மை தெரியவில்லை. ஒருவர்மட்டும் '40,000 குடும்பங்களுக்கு பாதிப்பு. போதிய மறுவாழ்வு அளிக்கப்படவில்லை. எனவே உயர்த்தக்கூடாது' என்றார். ஆனால் எதிராகவே தீர்ப்பு அளிக்கப்பட்டது. யாரை நம்புவது. நீதிமன்றத்தையும் நம்பமுடியவில்லை.

மக்கள் தீர்ப்பை புறங்கணிக்க முடியாது. நீங்கள் ஒன்றுபட்டு போராடினால் எந்த நீதிமன்றமும் ஏதும் செய்யமுடியாது. வேண்டுமானால் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு போடலாம். நான் அதை எதிர்கொள்ளப்போகிறேன்.

www.padippakam.com

இங்கு இன்னும் பல தொழிற்சாலைகள் வரலாம். அந்நியநாட்டு நிறுவனங்கள் வரலாம். நீங்கள் ஒன்றுபட்டு முறியடிக்க வேண்டும். இன்னும் ஆயிரக்கணக்கில் பெண்களை இந்தப்போராட்டத்தில் ஈடுபடுத்த வேண்டும். நானோ அல்லது வேறு யாருமோ வெளியே இருந்துவந்து தலைமை தாங்குவோம் என்று எதிர்பார்க்காமல் நீங்களே போராட்டத்தை முன்னெடுக்கவேண்டும். உங்களின் போராட்டத்தை நாங்கள் ஆதரிப்போம். இப்போது நான் இங்கே பேசிக்கொண்டு இருக்கிறேன். என்னுடன் போராட்டத்தில் ஈடுபட்ட 300 பெண்கள் சிறையில் இருக்கிறார்கள்.

நாம் நமது வாழ்வாதாரங்களையும் சுற்றுச்சூழலையும் பாதுகாக்க ஒன்று சேர்ந்து போராட இதுதான் சரியான நேரம். இயற்கை வளங்களை நம்பியிருக்கும் மக்கள் இப்போது ஒன்றுசேர்ந்து அவற்றை காப்பதற்காகப் போராடியாகவேண்டும். அம்முயற்சி, அந்த கூட்டுப்போராட்டம் இங்கேயிருந்து தொடங்கவேண்டும் என்று நான் ஆசைப்படுகிறேன்".

இந்த பொதுக்கூட்டத்திற்கு தமிழக விவசாயம், நிலத்தடிநீர், சுற்றுச்சூழல் பாதுகாப்பு சங்கத்தைச் சேர்ந்த என்.வரதராஜ், மூக்கப்பகவுண்டர், எஸ்.வி.திருமயம், ஏ.கே.சுபாஷ்ராஜ், சின்னசாமிக்கவுண்டர், எம்.பாக்கியமணி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

அகில இந்திய மக்கள் சர்வோதய இயக்க தலைவர் முனைவர்.மார்க்கண்டன், தமிழகப் பசுமை இயக்கத் தலைவர் ஜீவா, சமாதான வெண்புறா இரா.கோபால் உட்பட உப்புபள்ளம் செல்லப்பன், தொட்டப்பாளையம் வி.என். குமரேசன், டி.எஸ்.ஆர்.சாமி, ரங்கராஜன், மேட்டுப்பாளையம் அரங்கசாமி, கோவை ஏ.தேவராஜன், ஆர்.ராஜேந்திரன், கோத்தகிரி ஜெயச்சந்திரன், பு.புளியம்பட்டி எஸ்.மோகன்குமார், அன்னதாசம்பாளையம் செல்வம், சிட்டேபாளையம் கனகராஜ், கே.வெள்ளியங்கிரி, சிறுமுகை என்.சுந்தரம் ஆகியோர் சிறப்புரையாற்றினர். இராதாமணாளன் நன்றி கூறினார்.



நொங்கும் நுரையுமாக பொங்கிவரும் புதுவெள்ளத்தைப் பார்த்தால் எல்லோருக்கும் மகிழ்ச்சிதான். ஆனால் கிணற்று நீரே ஏன் இப்படி நுரைத்துப் பொங்குகிறது.

கே.ஜி. டெனிம் ஆலையின் கழிவுநீர் நிலத்தடி நீரைப் பாதித்ததால் ஏற்பட்ட அவலம்தான் இது. அப்புறம் எப்படி இந்த விவசாயியின் முகத்தில் மகிழ்ச்சி பொங்கும்?

பவானி, நொய்யல், அமராவதி ஆகிய ஆறுகளில் நேருகின்ற சுற்றுச்சூழல் சிக்கல்கள் பற்றி மேலும் அறிந்துகொள்ள தொடர்புகொள்ளுங்கள்.

**அமைதி அறக்கட்டளை**
காவலர் குடியிருப்பு அருகில்,
திருச்சி சாலை, திண்டுக்கல் - 624 005
தொலைபேசி: 0451 - 410021 தொலைநகல்: 0451 - 410372
மின்னஞ்சல்: peacetrust@vsnl.com
இணையம்: www.peacetrust.org.in

www.padippakam.com

# நோட்டம்

## நூல் அறிமுகம்



நூல் : **காவிரி**
**தமிழகம் இழந்துவரும் வரலாறு**
–முதற்கட்டம்

ஆசிரியர் : **எஸ்.கிருஷ்ணசாமி**
தமிழில் : **கலைவேலு**
வெளியீடு: **பூ.அர.குப்புசாமி,** காவிரி காப்புக் குழு,
19, மேற்கு மட வளாகம், கரூர்–639 001.
விலை : ரூ.15

சென்னை பல்கலைக் கழகத்தின் ஆண்டு ஏடான The Indian year book of International affairs-1968 ஏட்டில் சட்டப்பேராசிரியர் எஸ்.கிருஷ்ணசாமி எழுதிய An Approach to Inter-State River Water disputes in India- என்ற பெரிய கட்டுரையிலிருந்து காவிரி பற்றிய செய்திகளைத் தொகுத்து இந்த நூல் தருகிறது.

இந்நூலில் முதல் பகுதி நதி நீர் சட்டங்கள் பற்றி இருந்தாலும் பின் பகுதி காவிரி நீர் சிக்கல் எழுந்ததும், கர்நாடகம் சட்டவிரோதமான அணைகளைக் கட்டியே தீருவேன் என்று கட்டி வருவதும், தமிழகம் தயக்கத்துடனும் தாமதமாகவும் நடவடிக்கை எடுத்ததும் மத்திய அரசு ஓரவஞ்சனையாக நடந்து கொண்டதும் விளக்கமாகச் சொல்லப்பட்டுள்ளது.

தமிழ்நாடு, கர்நாடகம், மைய அரசு ஆகிய இவற்றில் தமிழகம் காவிரியை இழந்து வருவதற்குத் தலையாய காரணம் தமிழகத்தின் தவறுகளே என்பது தேற்றம். இந்தியாவைப் பொருத்தவரை நீர்ப்பிரச்சினையில் சட்டம் தெளிவாக உள்ளது. அதையும் மீறி நாம் காவிரியை இழந்தால் அது தமிழர்கள் குற்றமே என்கிறது இந்நூல்.

---



நூல் : **காற்றாய்.... புயலாய்...**
பெண் எழுத்தாளர் சிறுகதைகள்

தொகுப்பு : **ஞானி**
வெளியீடு: **நிகழ்**
123, காளீசுவரர் நகர், கோயமுத்தூர்–641 009
விலை : **ரூ.30**

திருமதி இராஜேஸ்வரி பாலசுப்ரமணியம் அவர்களின் திட்டப்படி பெண் எழுத்தாளர்களுக்கான சிறுகதைப் போட்டி மூன்றாவது ஆண்டிலும் நடைபெற்றது. அதில் தெரிவுசெய்யப்பட்ட சிறுகதைகள் இந்தத் தொகுப்பில் அடங்கியுள்ளன. உலகெங்கும் வாழும் தமிழ்ப் பெண்கள் தம்மை உணர்ந்து கொள்வதோடு, தம்மை உருவாக்கிக் கொள்வதற்கான பல்வகைப் படைப்பிலும் ஈடுபட வேண்டும் என்பது இராஜேஸ்வரி அவர்களின் எண்ணம். இந்த நோக்கத்தோடுதான் பெண் எழுத்தாளர்களுக்கான சிறுகதை முயற்சிகளை அவர் ஊக்குவிக்கிறார்.

சில கதைகளைப் படிக்கும்போது இந்த 21–ஆம் நூற்றாண்டிலும் மனிதன் விஞ்ஞான ரீதியில் அடுத்த உலகத்தை ஆள முயற்சிக்கும் கால விளிம்பிலும் இப்படி கொடுமைகளைப் பெண்கள் அனுபவிப்பது நம்பமுடியாத விடயமாக இருக்கிறது. பெண்ணியம் என்பது தனக்கும் தன்னைப்போல 'அடிமை'களாக வாழும் எத்தனையோ பெண்கள், ஆண்கள், குழந்தைகள் என்பவர்களின் விடுதலையான, முழுமையான வாழ்க்கைக்குப் போராடுவதின் தத்துவம். அந்த விடுதலையை அடைய நாம் எத்தனையோ விதத்தில் போராடலாம், முயற்சி செய்யலாம், கல்வி கொடுக்கலாம், கலைப் படைப்புக்கள் செய்யலாம். இந்தப் பெண்கள் சிறுகதைப் போட்டியும் இந்த மாதிரி முயற்சிகளில் ஒன்றேயாகும்.

www.padippakam.com

# நியூ-எட் பப்ளிகேசன்ஸ் வெளியீடுகள்,

## விற்பனை உரிமை பெற்ற நூல்கள்

### சுற்றுச்சூழல்

அஜெண்டா 21 — ரூ. 25
*ரியோ பூமி மாநாட்டுச் செயல் திட்டம்*

உலக வங்கியின் ஆரோக்கியமற்ற போக்குகள் — ரூ. 30
*உலக வங்கி நிதியால் ஏற்பட்ட சிக்கல்கள்*

பல்லுயிர் பெருக்கம் ( Bio Diversity) — ரூ. 30

நீலப்புரட்சியின் நெருக்கடி — ரூ. 15
*இறால் பண்ணைகளின் உலகளாவிய அனுபவங்கள்*

சுற்றுச் சூழல் சட்டங்கள் — ரூ. 16

கரூர் சுற்றுச்சூழல் சீரழிவு — ரூ. 8

பவானி - நஞ்சை சுமக்கும் நதி — ரூ. 5

காகிதக் கழிவா ? மானிட அழிவா ? — ரூ. 12
*கரூரிலுள்ள தமிழ்நாடு தாளாலை மாசுபாடு பற்றி*

மண்ணை மனிதர்கள்தான் காப்பாற்ற வேண்டும் — ரூ. 3

உங்களது சிறுசெயலும் சூழலை பாதுகாக்கும் — ரூ. 2

### கல்வி

நிலவைப்பிடித்த மக்கள் — ரூ. 75
*உழைக்கும் சிறுவர்களுக்கான கதைகள், பாடல்கள்*

புதுமைத் தமிழ் — ரூ. 10
*முன்பருவக் கல்வி கற்பிக்கும் முறை*

Scientific Investigation in Schools — ரூ. 20

### குழந்தைத்தொழிலாளர்

குழந்தைத் தொழிலாளர்கள் — ரூ. 50
*சட்டங்கள் பற்றிய அறிமுகம்*

பூவும் பொதியும் — ரூ. 7
*உழைக்கும் சிறுவர் பற்றிய கவிதைத் தொகுப்பு*

இந்தியாவில் குழந்தைத் தொழிலாளர்கள்
பாகம் 1 — ரூ. 75
பாகம் 2 — ரூ. 65

குழந்தை உழைப்பை ஒழித்துக்கட்டும் புதிய சாசனம் — ரூ. 3

### வரலாறு

புகழ்மிக்க விசாரணைகள் — ரூ. 18
*மாபெரும் தலைவர்கள் சந்தித்த வழக்குகள்*

திப்பு - விடுதலைப்போரின் முன்னோடி — ரூ. 30
*திப்புசுல்தான் பற்றிய கட்டுரை தொகுப்பு*

### உள்ளாட்சி

சட்டமன்றம் : ஓர் அறிமுகம் — ரூ. 30

புதிய பஞ்சாயத்து அரசாங்கம் — ரூ. 50
*உள்ளாட்சிகளுக்கான சட்டம், விதிமுறைகள்*

### சட்டம்

குடிபெயர்வு விதிமுறைகள் உள்ளடக்கிய குடிபெயர்வு சட்டம் - 1983 — ரூ. 40
*அயல்நாடுகளில் பணிபுரிய விளைவோர் அறிந்துகொள்ள வேண்டிய ஒரு சட்ட நூல்*

மேற்கண்ட எங்களது புத்தகங்களுக்கு தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள், நுகர்வோர் அமைப்புகள், தொழிற்சங்கங்கள் ஆகியோருக்கு 15 விழுக்காடு கழிவு தரப்படும். புத்தகங்களை வி.பி.பி. யில் அனுப்ப இயலாது. எனவே பணத்தை பணவிடை, வரைவோலை மூலம் **NEW-ED PUBLICATIONS** என்ற பெயரில் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி பெற்றுக்கொள்ளவும்.

**நியூ-எட் பப்ளிகேசன்ஸ்,**
*H 2-30 இராணிமங்கம்மாள் காலனி, அங்குநகர் (அஞ்), திண்டுக்கல் - 624 008*
*தொலைபேசி : 0451 - 433 812 தொலைநகல் : 0451 - 432 502*
*மின்னஞ்சல் : puthiyakalvi@hotmail.com*

படிப்பகம்

**PUTHIYA KALVI**
Environment Monthly
MAY 2001
RNI No. 76613/89 Postal Licence No: TN/SR-06
Licenced to Post Under Concessional Postage
www.padippakam.com

# சூழலைச் சிதைக்காமல் வாழ்த்துச் சொல்லிட . . .



## அமைதி

### வாழ்த்து அட்டைகள்

- மரங்களை அழிக்காமல், கழிவுகளிலிருந்து மறுசுழற்சி செய்யப்பட்ட கைவினைத் தாள்களைப் பயன்படுத்தி உருவாக்கப்படுகின்றன.
- பல்வேறு வண்ணங்களில், பல்வேறு வடிவங்களில், இயந்திரங்களின்றி கலைத்திறன் படைத்த பெண்களால் உருவாக்கப்படுகின்றன.
- இதன் விற்பனை மூலம் கிடைக்கும் வருவாய் கிராமப்புறப் பெண்கள் சுயமரியாதையுடன் வாழ்வதற்கும், சுரண்டலுக்குள்ளாகும் குழந்தைத் தொழிலாளர்கள் மீண்டும் பள்ளிக்குச் செல்வதற்கும் உதவுகிறது.

*தொடர்புகளுக்கு:*

**அமைதி அறக்கட்டளை**
காவலர் குடியிருப்பு அருகில், திருச்சி சாலை, திண்டுக்கல் - 624 005
தொலைபேசி: 0451 - 410021 இணையம்: www.peacetrust.org.in
தொலைநகல்: 0451 - 410372 மின்னஞ்சல்: peacetrust@vsnl.com

Edited and Published by Mercy Baskar on behalf of New-Ed Publications,
H 2-30 Rani Mangammal Colony, Dindigul - 624005. Printed at Kalaimagal Achagam, Dindigul.